நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 422839, 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி


ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6570 1990 ஏப்ரல் 23 திங்கட்கிழமை ★ ★ ★ දිනපති



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்



Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238


வானொலி டி வியில்

## முஸ்லிம் கல்வி மாநாட்டு விசேஷ நிகழ்ச்சிகள்

கொழும்பு, ஏப், 22

அகில இலங்கை முஸ்லிம கல்வி மாநாடு முஸ்லிமகல்வி வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டம ஒன்றை அங்குரார்ப் பணம செய்வதை முன் னிட்டு இன்று 23ஆந் திகதி விசேட வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி கள் ஏற்பாடாகி உள்ளன-

ரூபாவாஹினியில் இன்று எப்ரல் 23ஆந் திகதி மாலை தமிழ்

[2ஆ பக்கம பார்க்க]

## பிரதேச பல்கலைக்கழகங்கள் விடுபடும் மாணவர்களுக்கு

கொழும்பு, ஏப், 22

தகுதி பெற்றிருந்தும இட வசதியின்மையால் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளாமல் விடப்படும சுமார் 12 ஆயிரம மாணவர்கள் அடுத்த வருடம முதல் பிரதேச பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்பட இருக்கிறார்கள்-

மாலை நேரங்களில் பாடசாலைக் கட்டி டங்களிலேயே பிரதேச பல்கலைக்கழகங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது- உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ வி எஸ் ஹமீது இதனைத் தெரிவித்துள்ளார்-

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுக் கட்டிடத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற கூட்டமொன்றின் போதே அமைச்சர் இதைத் தெரிவித்தார்-

பல்கலைக்கழக உப வேந்தர்கள் பீட அதிபர்கள், தனியார் வர்த்தகர்கள் மற்றும வங்கி அதிபர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்-

பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் தொழில் வழங்குவது தொடர்பாகவும இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது- [உ-ற]

## இன்று புனித லைலத்துல் கத்ர்

கொழும்பு, ஏப், 22

புனித அல்குர்ஆன் அருளப் பட்ட "லைலத்துல் கத்ர்" இரவை முஸ்லிமகள் இன்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கின் றனர்-

இதனையொட்டி மஸ்ஜிதுக ளில் விசேட சமய நிகழ்ச்சிகள் இடம்பெறும-

கொழும்பு பெரிய பள்ளி வாசலில் பல சமய நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி உள்ளன.

வானொலியில் விசேட நிகழ்ச் சிகள் இன்று இரவு 11 மணி முதல் ஒலிபரப்பாகும். [உ—007]

## கிராம சேவகர் கைது ஜனசக்தி பத்திரங்களுக்கு பொருள் வாங்கியதாக

கொழும்பு, ஏப் 22

தமது பிரிவில் உள்ள கிராம வாசிகளின் ஜனசக்தி பத்திரங் களைத் தாமே வைத்துக் கொண்டு அவற்றுக்கான உதவிப் பொருட்களை பெற் றுக் கொண்டதாகக் கூறப் படும கிராமசேவகர் ஒருவர் அரனாயக்க பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு களைப் பெற்றவர்களிடம இருந்த அரசாங்கம ஜனசக்தி பத்திரங்களை மீளப் பெற்றுக் கொள்கிறது.

இவ்வாறு மீளப்பெறப்பட்ட பத்திரங்கள் மூலமே இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

சமபந்தப்பட்ட கிராம சேவகர் அரனாயக்க மாஜிஸ்தி ரேட் நீதிமன்ற நீதிவான் முன் ஆஜராக்கப்பட்டார்.

இரண்டாயிரம ரூபா ரொக்கப் பிணையில் நீதிவான் அவரை விடுவித்தார். (உ-ற)

# 14 கூட்டுத்தாபனங்கள் தனியாருக்கு கைமாறும்

## அரசு கொள்கையளவில் முடிவு: ஊழியர்களுக்கு தொழில் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் தகவல்

கொழும்பு, ஏப், 22

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் 14 கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசு பொறுப்பேற்ற நிறுவனங்களை இந்த வருடத்திற்குள் தனியார்துறையினரிடம் கையளிப்பதென அரசு கொள்கை அளவில் தீர்மானித்துள்ளது.

எயர் லங்கா குண்டு புரளி

## சி. ஐ. டி. பொலீஸ் குழு துபாய்க்கு விரைகிறது

கொழும்பு, ஏப், 22

லண்டனில் இருந்து துபாய் வழியாகக் கொழும்பு வரும் எயர் லங்கா விமா னங்கள் தொடர்ந்து குண்டுப் புரளிகளுக்கு இலக்காகி வருவதையடுத்து உயர்மட்ட விசாரணைகளை மேற் கொள்ள இரகசிய பொலீஸ் கோஷ்டி ஒன்று துபாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டது

இக்கோஷ்டி தனது புலன் விசாரணைகளை முடித்துக்

[2ஆம பக்கம பார்க்க]

சோமண்ணை



அடிச்சவர் அனுபவம் இல்லாதவராக்கும், அகப்பட்டுக் கொண்டார்,

பேராதனை

## பல்கலைக்கழக மாணவி சுமதி விடுதி 4ஆவது மாடியிலிருந்து விழுந்தார்

### இரவில் நடந்தது காலையில் தான் தெரியவந்தது

கொழும்பு, ஏப் 22

பேராதனை பல்கலைக் கழகத்தின் விடுதியொன்றில் 4 ஆவது மாடியிலிருந்து கீழே விழுந்த ஒரு தமிழ் மாணவி கண்டி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுளார்.

மாக இருப்பதாக தெரிய வரு கிறது,

விஜெவர்த்தனா விடுதியில தங்கியிருந்த பல் வைத்திய பீடத் தில் இரண்டாவது ஆண்டு மாண வியான செல்வி சி சுமதி ஸ்ரீ பத்மநாதன என்பவரே இவ் வாறு விபத்துக்குள்ளாகி இருக்

இரவு வேளையிலேயே இந்த விபத்து நடந்தது.

செல்வி பதமநாதனின் அறை யில் தங்கியிருந்த சக மாணவிக் குக் கூட சமபவம நடந்தது பற்றி காலை வரை தெரியா தாம,

காயமடைந்த மாணவியின்,

இந்த நிறுவனங்களில் போதிய உற்பத்தி நடைபெறாத காரணத்தினாலும், போதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்படாததாலும இந்த தீர்மானம எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 22 ஆயிரம ஊழியர்கள் இந்த 14 நிறுவனங்களிலும தற்போது கடமையாற்றுகிறார்கள்.

1977ஆம ஆண்டு இந்த நிறுவனங்களில் கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும இது 1300 குறைவு ஆகும.

இந்த நிறுவனங்கள் தனியார் துறையினரிடம கையளிக்கப்பட்டாலும ஊழியர்களின் தொழிலுக்கு உத்தரவாதம அளிக்கப்பட வேண்டும என தனியார் தொழில் அதிபர்களுக்கு நிபந்தனை விதிக்கப்படும என மேற்படி அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களை தனியார் துறையினருக்கு நேரடியாக வழங்கு முன்னர் இந்த நிறுவனங்களின் தலைவர்கள் சுதந்திர

[2ஆம பக்கம பார்க்க]

## விடுவிக்கப்பட்ட இந். மீனவர்கள் ஊர் திரும்பினர்

கொழும்பு, ஏப் 22

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட 57 இந்திய மீனவர்களும தமது சொந்த இடமான இராமநாதபுரத்தைச் சென்றடைந்தனர்.

இந்தத் தகவலை அகில இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் வைத்து இந்த 57 மீனவர்களும கடந்த 17ஆம திகதி விடுதலைப் புலிகளால் பிடித்து விசாரிக்கப்பட்டனர்.

தங்களைப் புலிகள் நன்றாக நடத்தினார்கள் என்று மீனவர்கள் செய்தி ஏஜென்சி ஒன்றுக்குத் தெரிவித்தனர் என்றும அகில இந்திய வானொலி அறிவித்தது.

(உ)

## மே தினக் கூட்டம் கூட்டாக நடத்தும் முயற்சி தோல்வி

கொழும்பு, ஏப், 22

எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்து மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. அதனால் மேதின ஊர்வலங்களும் கூட்டங்களும் அரசியல் கட்சிகளால் தனித்தனியாகவே நடத்தப்படவுள்ளன.

ஐக்கிய சோஷலிஷ முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளும் மேதினக் கூட்டங்களைத் தனித்தனியாகவே நடத்த முற்பட்டுள்ளன-

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி தனியாக மேதினக் கூட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளது- இக்கட்சியின் ஊர்வலம வெள்ளவத்தை குறே பூங்காவில் ஆரம்பமாகி ஹெவ்லொக் பூங்காவை வந்தடையும- அங்கு திரு ஒஸி அபேகுணசேகரவின் தலைமையில் மேதினக் கூட்டம நடைபெறும்- திரு வாசுதேவ நாணயக்கார

[2ஆம பக்கம பார்க்க]

கொண்டார்,

அவரத நிலைமை மோச கிறார.

# நுவரெலியா, பதுளை மண் சரிவு அபாயம்

## பல குடும்பங்கள் இடம் பெயரும்

கொழும்பு, ஏப், 22

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் பல இடங்களில் மண்சரியும் அபாயம ஏற்பட்டிருக்கிறது, அந்த இடங்களில் வாழ்ந்து வரும ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வேறிடங்களில் குடியேற்றப் படுவர்-

இதற்கான திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது-

நுவரெலியா மற்றும பதுளை மாவட்டங்களில் மண்சரிவு ஆபத்து பிரதேசங்களாகக் கருதப்படும இடங்களுக்கு விசேட ஆய்வுக் குழுவொன்று நேரில் விஜயம செய்து பார்வையிட்டு வருகிறது-

தேசிய கட்டட ஆராய்ச்சி

[2ஆ பக்கம பார்க்க]

## காணிப் பகிர்வு பற்றிய ஜனாதிபதி செயலணி குழு பணியை நிறைவேற்ற மேலும் 6 மாத அவகாசம்

கொழும்பு, ஏப் 22

தேசிய காணி உபயோகம், காணிப் பகிர்வு தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்பாணை ஏப்ரல் 26ஆம் திகதி முதல் மேலும 6 மாதங்களால் நீடிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச செயலணியின் காலத்தை நீடித்திருக்கிறார்.

காணிப் பகிர்வு தொடர்பாக நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித் திட்டம ஒன்றைத் தயாரித்து

[2ஆம பக்கம பார்க்க]

## நோன்பு தொழுகை நேரங்கள்

23 04 1990

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4–24 |
| சுபஹ் | 4–39 |
| சூரிய உதயம | 5–59 |
| ளுஹர் | 12–20 |
| அஸர் | 3–22 |
| மஃரிபு | 6–18 |
| இஷா | 7–38 |
| முடிவு 11–25 | |

கரயமடைந்த மாணவியின், முனகல் சததம கேட்டே காலையில் எல்லோரும விஷயம அறிந்தனர், என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரி திரு கிறிஸ்டோபர் பெரேராவின் உதவியுடன் பேராதனை பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(உ-ற)

## வாழ்க்கைச்செலவு சுட்டெண் 964,2

கொழும்பு, ஏப் 22

கடந்த மார்ச் மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 964,2 என அரசாங்கம வர்த்தமானி மூலம தெரிவித்துள்ளது.

(உ-கு)

## காங்கேசன்துறை துறைமுகத்தை பார்வையிட மஹ்ரூப் விரைவில் செல்கிறார்

கொழும்பு, ஏப் 22

துறைமுக, கப்பல்துறை ராஜாங்க அமைச்சர் ஜனாப் எம ஈ எச் மஹ்ரூப் விரைவில் காங்கேசன்துறை துறைமுகத்தைப் பார்வையிடுவதற்காகச் செல்லவிருக்கிறார்.

இத்துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும நிலைமைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆராய இருப்பதாக ஜனாப் மஹ்ரூப் "தினபதி"க்குத் தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று தாம அதிகாரிகள் சகிதம திருகோணமலை துறைமுகத்துக்கு விஜயம செய்து துறைமுக நிலைமைகளைப் பார்வையிட்டதாகவும அமைச்சர் கூறினார்.

(உ-007)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# விளைச்சல் குறையின் இறக்குமதிக்கு அனுமதி

## தனியார்துறைக்கு வழங்கப்படும்

கொழும்பு, ஏப், 22

நாட்டில் மரக்கறி மற்றும உருளைக் கிழங்கு விளைச்சல் குறையும காலத்தில் மாத்திரம பருப்பு, பமபாய் வெங்காயம என்பவற்றை இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு அனுமதி அளிக்கப்படும.

வர்த்தகத் துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் இவ்வாறு தீர்மானித்திருக்கிறார்.

பருப்பு மற்றும பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு தற்போது கூ மொ விற்பனை நிலையத்திற்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவும காலத்தில், பருப்பு மற்றும உருளைக் கிழஙகை பொதுமக்களின் தேவைக்கேற்ப கூடுதலாக சந்தைப்படுத்த வேண்டி இருப்பதாகவும அமைச்சர் குறிப்பிட்டார்.

(ல—ர)

## உயர்தர—பல்கலை கல்வி இணைப்புக்கு வெள்ளை அறிக்கை

கொழும்பு, ஏப், 22


பாடசாலைகளின் உயர்தர கல்விக்கும பல்கலைக்கழகக் கல்விக்கும இடையில் இணைப்பை ஏற்படுத்த வெள்ளை அறிக்கை ஒன்ற தயாரிக்கப்படும—

உயர் கல்வி அமைச்சு இவ்வாற தீர்மானித்துள்ளது—

இதற்கான யோசனைகளைத் தெரிவிக்க குழுக்கள் பலவும ஏற்கனவே நியமிக்கப்பட்டு உள்ளன

இக் குழுக்களில் கல்வித்துறை நிபுணர்கள் தொண்டர் இயக்கப் பிரதிநிதிகள் பல்கலைக்கழக அதிகாரிகள் உட்பட பல நபர்களும அங்கம வகிக்கின்றனர்—

[இ—007]



திரு எச் டபிள்யூ ஜெயவர்த்தனவின் பூதவுடல் கனத்தை மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம்,

[ண—*ச]

## தவக்கால போட்டிகள்

கொழும்பு, ஏப் 21

கொட்டாஞ்சேனை பஙகில் இயஙகிவரும புனித டொன் பொஸ்கோ இளைஞர் முன்னணியினர் தவக்காலப் போட்டிகள் சிலவற்றை நடத்துகின்றனர்—

போட்டிகளும போட்டிக்கான தலைப்புகளும வருமாறு—

கவிதை;— சிலுவையின் நிழலினிலே—

கட்டுரை;— மரணத்தின் பின் மனிதன் (600 சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டு )

சிறுகதை:— மனிதனாக வாழ

## எச். டபிள்யூவின் பூதவுடல் தகனம

கொழும்பு ஏப் 22

காலஞ்சென்ற கலாநிதி எச் டபிள்யூ ஜெயவர்த்தனாவின் இறுதிச் சடஙகுகள் கடந்த சனியன்ற மாலை கொழும்பு கனத்தை பொது மயானத்தில் நடை பெற்றன—

கலாநிதி ஜெயவர்த்தனவின் மூத்த சகோதரர் முன்னாள் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா திருமதி ஜெயவர்த்

இறுதிச் சடஙகில் பஙகுபற்றினர்—

சட்டத்துறை பிரமுகர்கள் பெரும எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்—

பௌத்தாலோக மாவத்தையில் உள்ள அவரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடத்தப்பட்டன—

பூதவுடல் அங்கிருந்து மோட்டார் ஊர்வலமாக கனத்தைக்கு எடுத்துச் சென்ற அங்கே



தனது சகோதரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்

## இதுவரை வழங்கப்படாதிருந்த வடக்கு கிழக்கு அரச ஊழியருக்கு ஊக்குவிப்பு பணம்

கிண்ணியா ஏப் 21

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடமை புரிகின்ற அரசாஙக ஊழியர்களுக்கு இதுவரை வழஙகப்படாதிருந்த ஊக்குவிப்புப் பணம விரைவில் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பேன்—

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும, துறைமுகஙகள், கப்பற்துறை ராஜாஙக அமைச்சருமான ஜனாப் எம் ஈ எச் மஹ்ரூப் இவ்வாற உறுதியளித்துள்ளார்

மூதூர் கிளை கல்வி ஊழியர் சஙகமும தபால் சேவை ஊழியர் சஙகமும ராஜாஙக அமைச்சர் ஜனாப் மஹ்ரூப்பை தனது இல்லத்தில் சந்தித்து இதுபற்றி முறையிட்டதை அடுத்தே இத் தகவலை அவர் தெரிவித்தார்—

ஜனாப் மஹ்ரூப், ஊக்குவிப்புப் பணத்தைப் பெற்றுத் தர கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியையும, தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு அலிக் அலுவிகாரையையும சந்தித்து இதுபற்றி பிரஸ்தாபிப்பதாகவும அவர் உறுதியளித்தார்—

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடமை புரியும அரசாஙக ஊழியர்களுக்கு கடந்த வருடம ஜூன் மாதம முதல் டிசம்பர் மாதம வரை ஆற மாத காலத்திற்கு கஷ்டப் பிரதேச ஊக்குவிப்புப் பணம வழஙக வேண்டும என பொது நிர்வாக அமைச்சு சுற்றுநிருபம அனுப்பியது—

இதன்படி இப் பகுதியில் உள்ள எல்லாத் திணைக்களஙகளையும சேர்ந்த ஊழியர்களும ஊக்குவிப்புப் பணம பெற்றுவிட்டனர்—

ஆனால் கல்வித் திணைக்களத்தையும தபால் திணைக்களத்தையும சேர்ந்த ஊழியர்களுக்கு மாத்திரம ஊக்குவிப்புப் பணம இதுவரை வழஙகப்படவில்லையாம—

இவ் ஊழியர்கள் இது குறித்து ராஜாஙக அமைச்சரிடம முறையீடு செய்ததை அடுத்து அமைச்சர் இக் குறையை தீர்க்க நடவடிக்கை எடுக்க உள்ளார்,

[இ—151]

## புத்தளம் வாசி வெட்டியும் சுட்டும் கொலை

கொழும்பு, ஏப். 22

புத்தளமவாசி ஒருவர் இனம் தெரியாத நபர்களினால் கத்தியால் வெட்டப்பட்டும துப்பாக்கியால் சுடப்பட்டும கொல்லப்பட்டுள்ளார்—

இச்சம்பவம அண்மையில் நடைபெற்றுள்ளதாக புத்தளம

## இன்றைய திரைகளில்

2 வது வாரம

ஜெலிமா
[கிராண்ட்பாஸ்]
2-30, 6-00, 9-30

ரியோ
[கொமபனித்தெரு]
(குளிரூட்டப்பட்டது)
திஙகள் முதல் வியாழன் வரை காட்சி நேரஙகள்
2-15, 6-15 மணி
சனி/ஞாயிறு
10-15, 2-15, 6-00, 9-00

வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

சுவர் இல்லாத சித்திரஙகள், புதிய வார்ப்புக்கள்
மௌனகீதஙகள் புகழ்
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

3 வது வாரம

சமந்தா
(தெமட்டகொடை)
10-30 2-30, 6-00, 9-00

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

10 வருஷத்துக்கு முன்பு

குறையாமல் இருக்க வேண்டு )

சிறகதை:- மனிதனாக வாழ மட்டும்

சுவரொட்டி:- உயிர்ப்பின் மாண்பு (அளவு 25" தர 20")

ஆக்கங்கள் அனைத்தும் தவக் காலத்தை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்- சகல ஆக்கங்களும் மே 15ஆம் திகதிக்கு முன் கொட்டாஞ்சேனையில் உள்ள புனித டொன் பொஸ்கோ இளைஞர் முன்னணி அமைப்புக்கு அனுப்பி வைக்க வேண்டும்- என அறிவிக்கப்பட்டுள்ளது [இ]

ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா திருமதி ஜெயவர்த்தனா அமைச்சர்கள் உறவினர்கள் அபிமானிகள் ஆகியோரும்

டார் ஊர்வலமாக களத்துக்கு எடுத்துச் சென்று அங்கே தகனம் செய்யப்பட்டது- [உ—007]



தனது சகோதரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட போது திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா சோகமே உருவாக நிற்பதைப் படத்தில் காண்கிறீர்கள் [ண—*ச]

## சி. ஐ. டி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு இவ்வாரம் நாடு திரும்பி உரிய அதிகாரிகளுக்கு விவரங்களை அறிவிக்கும்-

கடந்த வியாழனன்று லண்டனில் இருந்து வந்த எயர்லங்கா விமானம் ஒன்று குண்டுப் புரளிக்கு இலக்கானது-

இதையடுத்து துபாய் சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பான பகுதியொன்றில் அவசர அவசரமாக விமானம் இறக்கப்பட்டது- பயணிகள் அவசரகால வழியூடாக விரைவாக வெளியேற்றப்பட்டனர்-

குண்டு நிபுணர்களாலும மோப்ப நாய்களாலும விமானத்தில் உடனடியாகத் தேடுதல் பணி ஆரம்பிக்கப்பட்டது- பின்னர் இது ஒரு வெறும புரளியே என்ற உண்மை தெரிய வந்தது-

கடந்த வாரத்தில் மட்டும மூன்று தடவைகள் எயர் லங்கா பயணி விமானங்கள் இக்குண்டுப் புரளிக்கு இலக்காகி பல மணிநேர தாமதத்தின் பின்னர் கொழும்பை வந்தடைந்தன-

இச்சம்பவத்தை அடுத்தே துப்பறிவாளர் குழுவொன்று துபாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டது- [உ—032]

## மூதூரில் அன்னை பூபதி நினைவாக சைக்கிள் ஊர்வலம்

மூதூர், ஏப்- 22

மூதூரில் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுச்சி மிகு சைக்கிள் ஊர்வலமொன்றை ஒழுங்கு செய்திருந்தனர்-

இதில் நாலாயிரத்திற்கும மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்-

இவ்விளைஞர்கள் தமது சைக்கிள்களில் புலிச் சின்னம பொறித்த கொடிகளையும பறக்கவிட்டுக் கொண்டு சென்றனர்-

இளைஞர்களின் இச் சைக்கிள் ஊர்வலம அன்றையில் மூதூர் பொது மைதானத்தில் இருந்து ஆரமபமானது-

இவ்விளைஞர்கள் தெகிவத்தை சோமபுரம, அலிஒலுவ சேருவில முதலான சிங்களக் கிராமங்கள் ஊடாக சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்று மீண்டும பிற்பகல் (2-00 மணியளவில்) மூதூர் பொது மைதானத்தில் வந்தடைந்தனர்-

இவர்கள் சுமார் 50 மைல் தூரம ஊர்வலமாக வந்தனர்

ஈச்சிலம்பத்தை பிரதேச இளைஞர்கள் வெருகலில் இருந்து சைக்கிள் ஊர்வலத்தை ஆரமபித்த அலி ஒலுவ சந்தியை வந்த மூதாரில் இருந்து சென்ற இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டனர்-

[இ-401]

## மே தினக் கூட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரவின் தலைமையிலான நவ சமசமாஜக் கட்சிக் கூட்டம பொரளை கொட்டா பூங்காவில் நடைபெறவுள்ளது-

ஐக்கிய சோஷலிஸ முன்னணி என்ற பெயரின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சியும சமசமாஜக் கட்சியும் மேதினக் கூட்டத்தை நடத்துமென்றும ஸ்ரீலங்கா மக்கள் கட்சி [விஜய பிரிவு] இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமென்றும் தெரிவிக்கப்படுகிறது- ஆனால் இக் கூட்டம எங்கு நடத்தப்படும் என்பது தெரியவில்லை-

சுதந்திரக் கட்சியின் மேதின ஊர்வலம கிராண்ட்பாஸ் செயின்ஸ்தான் படமாளிகை முன்பாக ஆரமபித்து பொரளை கெம்பல் பூங்காவை வந்தடையும, இங்கு எதிர்க்கட்சித்தலைவி திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் மேதினக் கூட்டம நடைபெறும-

மக்கள் ஐக்கிய முன்னணியின் ஊர்வலம ஆனந்த கல்லூரியின் முன்பாக ஆரமபித்து கொமபனி வீதி டி மெல் பூங்காவை சென்றடையும- திரு தினேஷ் குணவர்த்தனாவின் தலைமையில் இங்கு மேதினக் கூட்டம நடக்கும-

ஐக்கிய தேசிய கட்சியின் மேதின ஊர்வலம சுகததாஸ அரங்கில் ஆரமபமாகி காலிமுகத் திடலை வந்தடையும்- அங்கு மாபெரும பொதுக் கூட்டம நடத்தப்படும-

இதேசமயம் ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியும் [ருக்மன் சேனநாயக்க] ஸ்ரீலங்கா முன்னேற்ற முன்னணி [எஸ் டி பண்டாரநாயக்க]வும் இமமுறை தாம மேதினக் கூட்டங்களை நடத்தப் போவதில்லை என அறிவித்துள்ளன-

பாட்டாளி மக்களிடையே மேதினக் கூட்டங்கள் பிளவையே ஏற்படுத்துகின்றன என்று ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியின் செயலாளர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா முன்னேற்ற முன்னணி மேதின ஞாபகார்த்தக் கூட்டம் ஒன்றை மட்டும நடத்த முடிவுசெய்துள்ளது-

[உ—032]

இச்சம்பவம அண்மையில் நடைபெற்றுள்ளதாக புத்தளம பொலீஸார் தெரிவித்தனர்-

கொல்லப்பட்டவர் புத்தளம நகரத்தைச் சேர்ந்த விண் போகொட என அடையாளம காணப்பட்டுள்ளார்- [ந—ழ]

## முஸ்லிம் கல்வி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்திகளுக்குப் பின் முஸ்லிம சமய கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் உரை நிகழ்த்துவார்-

இன்றிரவு வானொலி முஸ்லிம சேவையில் 7 மணிக்கு முஸ்லிம கல்வி மாநாட்டின் நிர்வாக சபைத் தலைவர் ஜனாப் எஸ் எல் எம் ஷாலி மரிக்கார் உரையாற்றுவார்-

ஆங்கில சேவையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம எச் ஆமிட்டும சிங்கள சேவையில் சட்டத்தரணி ஜனாப் ரீ எம அப்பாஸும தமிழ்ச் சேவையில் பிரதி பரீட்சை ஆணையாளர் அல்ஹாஜ் ஏ எம் முஸ்தகீரும உரையாற்றுவர்-

[உ—007]

## 14 கூட்டுத்தாப...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாகச் செயற்பட்டு நிறுவனங்களை இலாபகரமாக இயங்கச் செய்வதற்கு அவகாசம அளிக்கப்படும. அவர்களால் நிறுவனங்களை இலாபகரமாக இயங்க வைக்க முடியாது போனால் மட்டுமே அவை தனியார் துறையினரிடம ஒப்படைக்கப்படும.

இனிமேல் அரசாங்கம புதிய தொழில் துறைகளை ஆரமபிக்காது.

தனியார் துறையினரே ஊக்குவிக்கப்படுவர் என்றும அந்த அதிகாரி சொன்னார். (உ-ற)

## நுவரெலிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைப்பைச் சேர்ந்த பத்து பேர் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் இக் குடும்பத்தினர் வெளியேற்றப்பட்டு வேறிடங்களில் குடியேற்றப்படுவர்-

நுவரெலியாவில் மட்டும் சுமார் 450 ஏக்கர் பரப்பளவு மண் சரிவு அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது என்று நுவரெலிய அரச அதிபர் டட்லி திசாநாயக்க தெரிவித்தார்-

செங்குத்தான மலைப் பகுதிகளில் வாழ்ந்துவரும குடும்பங்கள் அப்புறப்படுத்தப்படும என்று பதுளை அரசாங்க அதிபர் எம பி வர்ஷக்கோன் கூறியுள்ளார்- [உ—032]

## ஜனாதிபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி திரு பிரேமதாச கடந்த வருடம அக்டோபர் 25 ஆம திகதி இந்தச் செயலணியை நியமித்தார்.

செயலணி 10 அமசத்திட்டம ஒன்றை வகுத்தது. அது ஏப்ரல் 25 இல் முடியும, 6 மாத காலப்பகுதிக்குரிய வேலைத் திட்டத்தின் கீழ் மாகாணங்கள் யாவற்றிலும பராதீனப்படுத்துவதற்கு உகந்ததாகக் கருதப்படும 6 லட்சம ஏக்கர் காணிகளை அடையாளம கண்டது.

இப்போது மாகாணங்களில் பராதீனப்படுத்தல் மற்றும பகிர்ந்தளிப்பு தொடர்பான நடைமுறைகள் சீராக்கப்பட்டிருக்கின்றன,


10 வருஷத்துக்கு முன்பு நடந்தது"தச் சொல்லப்படும ஒரு உண்மைக் கதை
ரஜனிகாந்த் — ராதிகா
ரகுவரன் — சித்ரா
பாண்டியன் — மூர்த்தி
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

13 வது வாரம
லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
விஜயா
(மட்டுநகர்)
2-30, 6-30, 9-30
பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

19 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30 2-30 6-00
சாந்தி
(மட்டுநகர்)
2-30 6-30 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

சினிமா என்றாலே

# மோசம் என்று நினைத்ததில் மோகம் கொண்ட கௌதமி

## திரையுலக பிரவேசம் பற்றி கூறுகிறார்

கௌதமியின் தமிழ்த் திரையுலகப் பிரவேசம் ஒரு குதூகல ஆரம்பம்— முதல் படம் குரு—சிஷ்யன் முதல் படத்திலேயே ரஜனிகாந்த் ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு

"நடிகை என்ற இந்த ஸ்தானம் என்னைப் பொறுத்தவரை தேடி வந்தது— நடிக்க வேண்டும் என்பதற்காக நான் கடுகு அளவு கூட முயற்சி பண்ணியது கிடையாது

என் அம்மா அப்பா இரண்டு பேரும் டாக்டர்கள் விசாகப்பட்டினத்தில் கிளினிக் வைத்து நடத்தி வருகிறார்கள்—

நான் பி இ முதலாண்டு படித்துக் கொண்டிருந்தேன் பிரபல பத்திரிகை அசிரியரும் "பூ ஒன்று புயலானது" படத்தைத் தயாரித்தவருமான ராஜேந்திர ராவ்தான் என்னை நடிக்க அழைத்தவர்—

என் தாய் தந்தையரை ஒரு வழியாக சம்மதிக்க வைத்து என்னை கெமரா முன்நிறுத்தியவர்—

"பிரதி பிம்பம்" என்ற என் முதல் படத்தை ஏனோதானோ என்று நடித்துக் கொண்டிருக்கும் போதே இரண்டாவது படத்தில் நடிக்க அழைப்பு எனக்கு வந்தது பெரிய பேனர் பெரிய டைரக்டர்— சரியென்று ஒப்புக் கொண்டேன்— "காந்தி நகர் 2வது தெரு" என்ற என் இரண்டாவது படம்தான் எனக்கு முதலில் வெளியானது படம் ஹிட்!

அதைத் தொடர்ந்து நிறைய தெலுங்குப் பட வாய்ப்புக்கள் அதுவரை கல்லூரிக்கு லீவ் போட்டு நடித்துக் கொண்டிருந்த நான் முழுசாக லீவ் போட்டு விட்டு படங்களை ஒப்புக் கொள்ள ஆரம்பித்தேன்—

நான் நடித்த இரண்டாவதாக வெளியான "ஸ்ரீனிவாச கல்யாணம்" என்ற படத்திற்காக எனக்கு அரசு விருது கிடைத்தது—

இப்படியாக தெலுங்குப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் போது அடிக்கடி சென்னை ஸ்டூடியோவுக்கு வருவது வழக்கம்

ஒருநாள் ஏவி எம் ஸ்டூடியோவில் நடித்துக் கொண்டிருக்கும் போதுதான் எஸ் பி முத்துராமன் அறிமுகம் கிடைத்தது—

அப்போது எஸ் பி முத்துராமன் சார் கூறினார் "அவசரப்பட்டு தமிழ்ப் படங்களை ஒப்புக் கொள்ள வேண்டாம—

நல்ல சந்தர்ப்பத்தில் நான் பயன்படுத்திக் கொள்கிறேன்" என்றார்— அது போலவே ஒரு



கௌதமி

தமிழில் வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது— ஆனால் இவ்வளவு பெரிய வாய்ப்பாக இருக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை

ரஜனியைப் பற்றி...

ரஜனி சாரைப் பற்றி சொல்ல எனக்கு என்ன தகுதி? ஒரு சூப்பர் ஸ்டார் இவ்வளவு எளிமையாக சிம்பிளாக இருக்க முடியுமா— பழக அவ்வளவு இனிமையானவர்— அவரைப் பற்றி எது சொன்னாலும் அது பொய்யாகத் தெரியுமோ என்ற பயம்தான் என்னைப் பேச விடாமல் தடுக்கிறது அவருடன் நடித்தது ஒரு நல்ல அனுபவம்—

நான் படித்ததெல்லாம் பெங்களூரில் உள்ள ஒரு போர்டிங் ஸ்கூலில் அதனால் ரொம்பக் கண்டிப்பு படம் பார்க்க எல்லாம் அனுமதி கிடையாது—

அதனால் சினிமா பற்றியெல்லாம் தனி அபிப்பிராயம் எதுவும் கிடையாது—

ஆனால் கேள்விப்பட்டதை வைத்து சினிமா என்றாலே மோசம்... அப்படி இப்படி என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்—

நான் நினைத்தமாதிரி எதுவும் இங்கு தப்பாக இல்லை"

[இ—10]



நேசம் கொள்வது பாசாங்கு செய்து வாலிபர்களை வனவாசத்திற்கு அனுப்புவதும் வஞ்சியர்தான், பாசம் வைத்தவனுக்காக ஏங்கி பகல் இரவாய் பரிதவிப்பவர்களும வனிதையர்கள்தான். இவளும பாசக்கரங்களில் அணைத்து வேஷம்தான் போடுகிறாளோ? அதனை "ஆவதெல்லாம பெண்ணாலே" வந்தவுடன் அறிந்து கொள்ளலாம.

சிறப்பாக கடமையாற்றும்

# ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்க வேலை திட்டம்

## அமைச்சர் லலித் தகவல்

கொழும்பு, ஏப்— 22

ஆசிரியத் தொழிலில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கும வேலைத் திட்டம ஒன்று நடைமுறைப்படுத்தப்படும—

இத் தகவலை கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்—

இசுருபாயாவில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது— இக் கலந்துரையாடலின் வைத்து இத் தகவல் தெரிவிக்கப்பட்டது—

இக் கலந்துரையாடலை அரச சேவை தொழிற்சங்க சம்மேளனமும தேசிய கல்விச் சேவைகள் சங்கமும இணைந்து நடத்தின

ஆசிரியத் தொழில் சம்பந்தமான பிரச்சினைகள், ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைகள் அவற்றின் தீர்வுகள் என்பன கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டன—

மேற்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது—

தங்களை முழுமையாக அர்ப்பணித்து பணிபுரியும ஆசிரியர்களுக்கும மற்றைய ஆசிரியர்களுக்கும இடையில் தற்போது வித்தியாசம காண முடிவதில்லை

இத் திட்டத்தின் மூலம இருவர்களுக்கும இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும

தங்களுக்கு வழங்கப்படுகின்ற லீவுகளை பெறாமல் தொடர்ந்து சேவை செய்தவரும ஆசிரியர்களின் சேவையை கௌரவிப்பது அவசியம அவர்களுக்கு தகுந்த நிவாரணத்தை வழங்க வேண்டும—

தற்போது 1400 ஆசிரியர்களுக்கே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன— எதிர்காலத்தில் 6000 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டியதன் அவசியம உணரப்பட்டுள்ளது—

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம அதே பாடசாலையில் பயிற்சியற்று இருக்கும ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்கவும உத்தேசிக்கப்பட்டுள்ளது—

ஆசிரியர்களின் சம்பளப் பணம முழுவதையும ரொக்கமாக வங்கிகளில் வைப்பிடுவதன் மூலம ஆசிரியர்கள் தங்கள் காசோலைகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள முடியும—

5ஆம ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களில் பணம பெறும மாணவர்களின் எண்ணிக்கை 25,000மாக உயர்த்தப்படவும உத்தேசிக்கப்பட்டுள்ளது—

அத்துடன் பின்தங்கிய பாடசாலைகளை முன்னேற்றவும திறமையான மாணவர்களுக்கு சிறந்த பாடசாலைகளில் கல்வியை தொடரவும வசதி செய்து கொடுக்கப்படும—

இவ்வாறு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்—

(இ—ழ)



### அஸ்வர் — தூதுவர் சந்திப்பு

சோமாலியா இந்தியா ஆகிய நாடுகளின் தூதவரான ஜனாப் ஒஸ்மான் ஓமர் அண்மையில் முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வரை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த போது எடுக்கப்பட்ட படம

ரு (இ—007)

# மதுரங்குளி தபால் நிலையத்தில் தமிழ் தெரிந்தவர்கள் இல்லையாம்

கொழும்பு, ஏப்— 22

மதுரங்குளியில் தபால் நிலையம, வங்கி போன்றவற்றில் தமிழ் தெரிந்த அதிகாரிகளைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும.

மதுரங்குளி முஸ்லிம வீக்

தமிழ் முஸ்லிம மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இக்குறையைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும.

இவ்வாறு அக்கடிதத்தில்

# பொலன்னறுவை காட்டில் 3 துப்பாக்கிகள் சிக்கின

கொழும்பு, ஏப்— 22

பொலன்னறுவை காட்டுப் பகுதியில் இருந்து மூன்று கன்னியக்கு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன—

ஒன்றும, எல் எம ஜி சுழல் துப்பாக்கி ஒன்றும கண்டுபிடிக்கப்பட்டுள்ளன—

இந்த ஆயுதங்கள் ஜே வி பியினராலோ, தமிழ் தேசிய இரா

ன்றார்— அது போலவே ஒரு நாள் ரஜனி ஜோடியாக என்னை ஒப்பந்தம் பண்ணினார்—

பெண்ணாலே" வந்தவுடன் அறிந்து கொள்ளலாம.

[எஸ் வி சேகர் - வீஜி]

(இ-10)



விஜயன்

# விஜயன் நடிக்கும் 'பைரவி நிலையம்

ஆர்ட்லண்ட் பிக்சர்ஸ் என்னும பட நிறுவனம "ஆசைக் கிளியே கோபமா" என்ற படத்தை தயாரித்து உள்ளத்,

இந்தப் படம முடிவடைந்த விரைவில் திரைக்கு வர இருக்கிறது—

இதையடுத்த இந்த நிறுவனம தயாரிக்கும படம "பைரவி நிலையம"

இத அவி பற்றிய கதை பயஙுகா திகில் படமாக உருவாக இருக்கிறது—

"சினிமாஸ்கோப்"பில் தயாராகும இந்தப் படத்தில் நடிக்க ரீனாவின் தமபி "நவீன்" கதா நாயகனாக அறிமுகமாகிறார்

இவர்களுடன் விஜயன் நாசர் டெல்லி கணேஷ் பயில்வான் ரஙுகநாதன் மனோரமா மோகனப்ரியா கோவை லதா ஆகியோரும நடிக்கிறார்கள்—

எஸ் ஏ ராஜ்குமார் பாடல்கள் எழுதி இசை அமைக்கிறார்

ஹேமச்சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார்—

கண்மணிசுப்பு வசனம எழுதி கதை திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்கிறார் டி கே பிரசாத் இவர் திரைப்படக் கல்லூரி மாணவர்—

ஜி ஏழுமலை தேமபல் கனி ஆகிய இருவரும தயாரிக்கிறார்கள்—

[இ-10]

# முஸ்லிம் வாலிபன்
## மீது ராகசுதா காதல்

முஸ்லிம வாலிபன் ரஹமான் மீத காதல் கொண்டார் ராகசுதா— இந்தக் காதலை விருமபாத ராசுப்பிள்ளை ஊரில் இத பற்றி புரளி கிளப்பிவிட்டார்

இப்படியொரு காட்சி "மண் உக்கேத்த மைநதன்" படத்தில் இடமபெறுகிறது—

இந்தப் படத்தை பி கணேச பாண்டியின் ஒளிப்பதிவு செய்ய தீனதயாள் டைரக்ட் செய்தார் கதை திரைக்கதை வசனத்தை எஸ் என் ரவி எழுதுகிறார் தேவா இசை அமைக்கிறார்— பி எஸ் வீரப்பா தயாரிக்கிறார்—

ரஹமானாக ராமராஜனும ராசுப்பிள்ளையாக கிட்டியும நடித்தனர்—

மற்றம நாகேஷ் சின்னி ஜெயந்த் குமரிமுத்து சிவராமன் ஹாஜாசெரீப் ஆனந்தராஜ் ஸ்ரீவித்யா கோவை சரளா உட்பட பலர் நடிக்கின்றனர்—

[இ-10]

## தினபதி சினிமா

மதரங்குளி முஸ்லிம லீக் வாலிப முன்னணி; முஸ்லிம சமய கலாசார ராஜாஙக அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வரிடம இவ்வாற கோரிக்கை விடுத்துள்ளத.

முன்னணித் தலைவர் ஜனாப் எம ஐ எம பியாஸ் இத தொடர்பாக அமைச்சருக்குக் கடிதம ஒன்ற எழுதி இருக்கிறார்..

அதில் அவர் தொடர்ந்த கூறி இருப்பதாவது—

மதுரஙகுளி தபால், வஙகி, அலுவலகஙகளில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லை. இதனால் இப்பிரதேசத்தில் வாழும

இவ்வாற அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளத.

(இ-007)

## பணம் கொள்ளை

கொழு பு, ஏப்— 22

தலேவலை, கொத்மலை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையம, கல்வி நிறுவனம ஆகியவற்றிலிருந்து சுமார் ஒன்றரை லடசம ரூபா ரொக்கப் பணம கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது—

இது குறித்த அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலையஙகளில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது—

தலேவலை, மாத்தளை பாதையில் அமைந்துள்ள வர்த்தக நிலையம ஒன்றிலிருந்து 65 ஆயிரம ரூபா ரொக்கப் பணமும கொத்மலையில் அமைந்துள்ள வெளிநாட்டு கல்வி நிறுவனம ஒன்றிலிருந்து 40 ஆயிரத்து 500 ரூபாவும கொள்ளையிடப்பட்டிருக்கிறது—

தலேவலை, கமபளை பொலீஸார் இந்தக் கொள்ளைச் சமபவஙகள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்—

[ந—வ]

கைப்பற்றப்பட்டுள்ளன—

ஜெர்மன் நாட்டுத் தயாரிப்பான ஜீ-3 துப்பாக்கியும, ரஷ்யத் தயாரிப்பான ஏ கே 47 ரைபிள் யினராலோ, தமிழ் தேசிய இராணுவத்தினராலோ மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம எனச் சந்தேகிக்கப்படுகிறது—

(ண-ழ)


இப்பொழுது பெறலாம்!

குணசேன

ஆங்கில—தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00




பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலய பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே

எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்

எம். டி. குணசேன

அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு-
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4465
— 1990 ஏப்ரல் 23 —

# கருணாநிதி குடும்பம் தவறு செய்தது உண்டா?

## அவர் பத்திரிகையில் கொடுத்த விளம்பரம் ஏற்படுத்திய சர்ச்சை

"எனது குடும்பத்தினர் பெயரை வேறு சிலர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காகத்தான் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. என் குடும்பத்தினர் யாராவது தவறு செய்தால், ஒன்று நான் உயிரோடு இருக்க வேண்டும். அல்லது அவர்கள் உயிரோடு இருக்க வேண்டும் என்ற நிலை தான் உள்ளது" என்று தமிழக சட்ட சபையில் முதலமைச்சர் கருணாநிதி விளக்கம் அளித்தார்.

திரு கருணாநிதி அண்மையில் பத்திரிகைகளில் பின்வருமாறு விளம்பரம் கொடுத்திருந்தார்.

முதல்வர் அறிவிப்பு

என் குடும்பத்தில் உள்ளவர்களினாலோ எனது உறவினர்களினாலோ அல்லது அவர்களின் பெயர்களினாலோ யாராவது நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ எவ்வித பரிந்துரைகள் செய்தாலும், அவற்றை எந்த ஒரு அதிகாரியும் பொருட்படுத்தத் தேவையில்லை என்றும், அது குறித்து உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள். என் குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் எனது உதவியாளர்கள் பெயர்களைப் பயன்படுத்தி யாரோ சிலர் இது போன்ற விஷமத்தனமான செயல்களில் ஈடுபடுவது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

சென்னை 2 – 4 – 90 மு கருணாநிதி தமிழ்நாடு முதலமைச்சர்

— இவ்வாறு முதலமைச்சரின் விளம்பரம் பத்திரிகைகளில் வெளிவந்தது.

"இந்த விளம்பரத்தை முதலமைச்சர் கொடுக்கும் அளவுக்கு என்ன நடந்து விட்டது?" என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு எஸ் ஆர் ராதா கேட்டார். அதற்கு திரு கருணாநிதி விளக்கம் தந்தார்.

சில பேர் எங்கள் பெயரைப் பயன்படுத்தி அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசுவதாக தகவல்கள் கிடைத்தன. என் உதவியாளர் பெயரைச் சொல்லி காஞ்சிபுரத்துக்கு ஒரு மருந்தாளுநர் நியமனம் சம்பந்தமாகப் பேசி இருக்கிறார்கள். மீண்டும் அங்கிருந்து அதிகாரிகள் எங்களுடன் தொடர்பு கொண்டபோது இப்படி யாரோ எங்கள் பெயரைப் பயன்படுத்தி இருப்பது தெரியவந்தது.

மேலும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடைய விசிட்டிங் கார்டை ஒரு வேலைக்காக மனுவுடன் இணைத்து ஒரு வாட்ச்மேன் வேலைக்காக அனுப்பி இருக்கிறார்கள். இப்படி துஷ்பிரயோகம் நடப்பதால், அதை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த விளம்பரம் வெளியிடப்பட்டது.

எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த யாரும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களானால் ஒன்று அவர்கள் உயிரோடு இருக்க வேண்டும். அல்லது நான் உயிரோடு இருக்க வேண்டும் என்ற அளவுக்கு முடிவு ஏற்பட்டு விடும்.

உ ரா வரதராஜன்— முதல் அமைச்சர் பத்திரிகை விளம்பரத்திற்கு விளக்கம் அளித்து இருக்கிறார். கடந்த காலத்தில் முதல் அமைச்சராக இருந்த எம் ஜி ஆரும் இப்படி ஒரு விளம்பரம் போட்டாரே? அது குறித்து அ தி மு கவினர் என்ன சொல்கிறார்கள்?


எஸ் ஆர் ராதா— அன்று எம் ஜி ஆர் விளம்பரம் செய்த போது நீங்கள் என்ன சொன்னீர்கள்? அதை எப்படி எல்லாம் விமர்சனம் செய்தீர்கள்? இன்று உங்கள் உணர்வுகளை நான் மதிக்கிறேன். அதே நேரத்தில் எம் ஜி ஆரை எப்படி நீங்கள் விமர்சனம் செய்தீர்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கருணாநிதி— கடந்த காலத்தில் நண்பர் எம் ஜி ஆர் வெளியிட்ட விளம்பரத்திற்கும், இப்போது நான் வெளியிட்ட விளம்பரத்திற்கும் வித்தியாசம் உண்டு.

எம் ஜி ஆர் வெளியிட்ட விளம்பரத்தில், அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்ற எண்ணத்தை தோற்றுவித்தது.

ஆனால் இப்போது நான் வெளியிட்ட விளம்பரம், என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெயரை சிலர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற வகையில் தான் உள்ளது.

இவ்வாறு கருணாநிதி கூறினார். (ம-10)



### நன்றியுரை வழங்கல்

தி, அல் அக்ஸா மகளிர் வித்தியாலயத்தில் புதிய மூன்று மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நடும் வைபவமும், மாணவ தலைவர்களுக்கான இலச்சினை அணிவிக்கும் வைபவமும் மேற்படி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.

இம்மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல்லையும், மாணவத் தலைவர்களுக்கான இலச்சினை அணிவித்தலையும்,

திருகோணமலை மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு க தியாகராசா ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், வித்தியாலய ஆசிரியருமான ஜனாப் ஏ ளீ முகமது முஸ்லீல், நன்றியுரை வழங்கியபோது எடுக்கப்பட்ட படத்தையே இங்கு காண்கிறீர்கள்.

இப்படத்தின் வலது பக்கத்தில், மேற்படி வித்தியாலய அதிபர் ஜனாப் ஏ எம் எம் முஸ்தபா, நடுவில் திருகோணமலை மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு க தியாகராசா ஆகியோரும் அமர்ந்திருக்கின்றனர்.

### பல்கலைகளில் ராகிங் வேண்டாம்

பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்படவிருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் அனைவரும் கூட்டாக மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

ராகிங் சேஷ்டையில் இறங்கக் கூடாது என்பதே அந்த வேண்டுகோள் ஆகும்.

பல்கலைக்கழகங்களில் புதிதாகச் சேரும் மாணவர்களுக்கு அங்கு கல்வி பயின்று வரும் சிரேஷ்ட மாணவர்கள் ராகிங் என்ற பெயரில் சேஷ்டைகள் செய்தும் தொல்லை கொடுத்தும் மகிழ்வார்கள்.

புதிய மாணவர்களைப் பல்கலைக்கழகச் சூழலுக்குப் பரிச்சியப்படுத்திக் கொள்வதற்காகவே ராகிங் செய்வதாகச் சிரேஷ்ட மாணவர்கள் கூறுவர்.

ஆனால் இந்த ராகிங் வரம்பு மீறி வன்செயலாக மாறிப் புதிய மாணவர்களைத் துன்புறுத்தி விடுகின்றது.

அருவருக்கத்தக்க தரக்குறைவான சம்பவங்களும் ராகிங் என்ற பெயரில் நடைபெற்றிருக்கின்றன.

ராகிங் காரணமாக எத்தனையோ மாணவர்கள் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ராகிங் உயிராபத்தை விளைவித்த சம்பவங்களும் உண்டு.

ஆகவே ராகிங்கை மாணவர்கள், பெற்றோர், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் பொது மக்கள் எவருமே விரும்பவில்லை.

பல்கலைக்கழகங்களில் ராகிங் தடை செய்யப்பட்டிருக்கிறது.

இதைப் பல்கலைக்கழக உபவேந்தர்கள் மாணவர்களுக்கு

திஹாரிய மாவட்டத்தில்

## அடிக்கடி ஏற்படும் மின்சார தடையால் மக்கள் பாதிப்பு

திஹாரிய ஏப் 21

கம்பஹா மாவட்டத்தில் அத்தனகலைப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட திஹாரிய வட்டாரத்தில் அடிக்கடி மின்சாரம் எந்த வேளையிலும் குப்பி விளக்குகள், மெழுகு வர்த்திகளைக் கையிருப்பில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் மின் பாவனையாளர்களுக்கு நேர்ந்துள்ளது.

பத்தவர் ஒருவர் தினபதி நிருபரிடம் முறையிடுகையில் அதிகாரிகள் மின்கட்டணங்களைக் கணிக்கும் போது ஏனோ தானோ என்று செயல்படுவதாகவும்,

இவர்கள் செய்துவரும் குளறு



### ஈரான் காரிகள் மடவளை விஜயம்

ஈரான் காரிகள் மடவளை ஜாமியுல் கைராத் பள்ளி வாசலுக்கு விஜயம் செய்தனர்.

ஈரானில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள காரிகள் மூவர் அண்மையில் மேற்படி பள்ளி வாசலுக்கு வருகை தந்து "கிராத் கஸீதா" போன்ற நிகழ்ச்சிகளை நடத்தியதாகவும் தெரிய வருகிறது. (ஐ-431)

### அக்குறணையில் புதிய தைக்கா

மடவளை ஏப் 21

அக்குறணை குருகொடையில் ஓர் புதிய "தைக்கா" ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குருகொடை பள்ளிமுதுன என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய தைக்காவில் தற்போது "தராவீஹ்" தொழுகை உட்பட ஏனைய சமய சடங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பகுதி மக்களின் நீண்டநாட தேவையை இது பூர்த்தி செய்வதாகவும் தெரிய வருகிறது. (ஐ-431)

### தேர்த் திருவிழா

கட்டுகஸ்தோட்டை ஏப் 21

கண்டி முகயாவ ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் 134 ஆவது ஆண்டு சித்திரை பௌர்ணமி தேர்த்திருவிழா மே மாதம் ஒன்பதாம் திகதி முதல் பதினோராம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளது.

மேற்படி தேர்த்திருவிழாவுக்கான ஒழுங்குகளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பரிபாலன சபையின் தலைவர் திரு என் இராஜூ, செயலாளர் திரு எஸ் ஸ்ரீதரன், பொருளாளர் திரு ஏ பீ சிவஞானம் ஆகியோர் செய்து வருகின்றனர். (ஐ-139)

### அமைச்சருக்கு வரவேற்பு

கிண்ணியா ஏப் 21

துறைமுகங்கள் கப்பற்றுறை ராஜாங்க அமைச்சரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப், எம் ஈ எச் மஹரூப்பிற்கு வரவேற்பு ஒன்றினை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்

வேந்தர்கள் மாணவர்களுக்கு நினைவுபடுத்தி இருக்கிறார்கள்.

தடையை மீறி மாணவர்கள் பல்கலைக்கழக வளவிலோ அல்லது வெளியிலோ ராகிங்கில் ஈடுபட்டால் பொலீஸாரை வரவழைத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி வரும என்றும உப வேந்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதிலிருந்து பல்கலைக்கழகங்களில் ராகிங்கை நிறுத்துவதில் உப வேந்தர்கள் கண்டிப்பாக இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

மாணவர்களும இமமுறை பல்கலைக்கழகங்களை மூட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தக் காரியங்களிலும ஈடுபட மாட்டார்கள் என்றே நமபப்படுகிறது.

அமைதியின்மை காரணமாக நீண்ட காலம பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுக் கிடந்தன. அப்போது மாணவர்கள் தமது கல்வியை இழந்தார்கள். எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

அப்படியான ஒரு நிலை மீண்டும ஏற்படுவதை மாணவர்கள் விருமபுவார்களா?

மாணவர்களைக் கைப்பொமமைகளாக வைத்துக் கொண்டு சுய ஆதாயம தேடும சில அரசியல் சக்திகள் இருக்கின்றன. அவை எந்த விதத்திலும குழப்ப நிலையை ஏற்படுத்தவே விருமபுகின்றன.

அந்தத் தீய அரசியல் சக்திகளின் வலையில் மாணவர்கள் விழுந்துவிடக் கூடாது.

---

தில் அடிக்கடி மின்சாரம தடைப்படுவது வழக்குமாகி விட்டது.

இரவு நேரங்களில் மின்சாரம தடைப்பட்டால் பெருமபாலும அடுத்த நாள் மாலையிலேயே பழுது பார்க்கப்படும அவலநிலை இங்கு உருவாகியுள்ளது.

இப்பிரதேசத்தில் இணைக்கப்பட்டுள்ள இரண்டு மின்வலய லைன்களில் குறிப்பிட்ட ஒரே "லைன்" மட்டும தான் அடிக்கடி பழுதடைகிறது:

எனவே அந்த "லைன்" வழியாக மின்சாரம வழங்கப்பட்டுள்ள வீடுகள், கடைகளிலும, பள்ளிவாசல்களிலும

---

## அரபுக் கல்லூரி: மாணவர் சேர்ப்பு

வெயாங்கொடை: ஏப் 21

கமபஹா மாவட்டத்தில் மிகச் சிறந்த அரபுக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்ந்து வரும உடுகொடை அல்ஹஸனியா அரபுக் கல்லூரிக்கு 1990 ஆம ஆண்டிற்கான மாணவர்களைச் சேர்க்கும பணிகள் தற்போது ஆரமபிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களைச் சேர்ப்பதற்கான இறுதித் தினம இம மாதம 25 ஆம திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரமப வகுப்புக்காக 10 மாணவர்கள் மாத்திரமே சேர்க்கப்படவுள்ளனர், 13 வயதிற்குட்பட்ட 8ஆம ஆண்டு வரை கல்வி பயின்றவராயும, குர்ஆனைப் பார்த்து ஓதத் தெரிந்தோராயும இவர்கள் இருக்க வேண்டும. (ஐ-320)

---

தன்ளது.

ஒரு சில வீடுகளில் குறைந்தளவு மின்சாரம பாவிக்கப்பட்டிருந்தும அதிக யூனிட்டுகளுக்குரிய மின் கட்டணம செலுத்த வேண்டி உள்ளதாகச் சிலர் புகார் தெரிவிக்கின்றனர்,

குறைந்தளவு மின்சாரம பாவிக்கும நடுத்தரக் குடும

இவர்கள் செய்துவரும குளறுபடிகளால் தாம பாவிக்காத மின்சாரத்துக்கும வீணாக மேலதிகப் பணம செலுத்த நேர்ந்துள்ளதாகத் தெரிவித்தார், இது போன்ற மின்விநியோக சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும. (ஐ-034)

---

# புத்தளத்தில் சுகாதார சீர்கேடு பற்றி நகர சபையில் குரல்:

புத்தளம ஏப் 21

புத்தளம நகரில் வாழும மக்களின் நோய்களைக் கூட எம்மால் தீர்த்து வைக்க முடியா விட்டால் நாம இச் சபையில் இருந்து கொண்டு எதை சாதிக்கப் போகின்றோம?,

புத்தளம நகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜனாப் எச் எம எச் ஹுஸைன் (ஸ்ரீ ல சு க) மேற்கண்டவாறு குரலெழுப்பினார்.

புத்தளம நகர சபையின் மாதாந்த அமர்வு அண்மையில் தலைவர் அல்ஹாஜ் எம ஐ பிஸ்ருல்ஹாபி தலைமையில் நடைபெற்றது,

அவ்வமயம உரையாற்றும போதே ஜனாப் ஹுஸைன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும கூறியதாவது-

புத்தளம ஆஸ்பத்திரியை ஒரு தள ஆஸ்பத்திரியாக தரமுயர்த்துமபடியும போதிய வைத்திய அதிகாரிகளை நியமிக்குமபடியும கோரி நாம பல பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளோம.

அத்துடன் அங்குள்ள மலசலகூடங்கள் நிரமபி வழிவதாகவும, மின்சார போக்குவரத்து வசதிகளை இலகுவாக்குமபடியும நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வெறும எழுத்துருவில் மாத்திரமே உள்ளன, செயலுரு பெற்றதாத் தெரியவில்லை.

ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களுக்கு வருடத்துக்கு ஒரு முறை உணவு வழங்குவதுடன் நகரசபை உறுப்பினர்களின் கடமை நிறைவேறி விட்டதா?

ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்யாது பாமர மக்களை மதிக்காது விட்ட குற்றத்திற்காக இறைவனால் கடுமையான சோதனைக்குள்ளாக்கப் படுவோம.

இவ்வாறு அவர் கூறினார். (ஐ-241)

---

தியாகராஜா ஆகியோரும அமர்ந்திருக்கின்றனர்.

(படம- கிண்ணியா தினபதி நிருபர்) (ஐ-151)

---

# புனித ரமழான் சிந்தனைகள்

பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும புனித மாதம ரமழான்

எமக்குத் தேவையான இமமை மறுமைத் தேவைகளை அல்லாஹ்விடம இருந்து பெற்றுக் கொள்வதற்காக இம மாதத்தில் கூடுதலான அளவு பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும-

அதாவது "துஆ" கேட்க வேண்டும-

நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்-

மூன்று பேர்களின் துஆக்கள் மறுக்கப்படுவதில்லை

நோன்பாளி நோன்பு திறக்கும போது கேட்கும துஆ- (2) நீதியுள்ள அரசனின் துஆ- (3) அநீதி இழைக்கப்பட்டவனின் துஆ-

எனவே, நாம நோன்பு திறக்கும சமயத்தில் எமது தேவைகள் குறித்து துஆச் செய்ய மறந்து விடக் கூடாது-

ஆனால் நோன்பு திறக்கும நேரத்தில் பெருமபாலானோரின் கவனம உணவில்தான் இருக்கின்றது-

கஞ்சி குடிப்பதிலும வகை வகையான உணவுப் பண்டங்களைச் சுவைப்பதிலும அவர்களின் முழுக் கவனமும சென்று விடுகின்றது-

மஃரிபுத் தொழுகையைக் கூட ஜமாஅத்தாக நிறைவேற்றும சந்தர்ப்பத்தை இழந்துவிடுகின்றனர்-

இனி பிரார்த்தனைகள் பற்றி சிந்திக்க நேரம ஏது?

எமது பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதில்லையே என்று எவரும வருந்துவது கூடாது.

எமது உண்மையான பிரார்த்தனைகள் அனைத்தும இறைவனிடத்தில் ஏதோ ஒரு வகையில் அங்கீகாரத்தைப் பெறுகின்றன

இதனை சாதாரண மனிதர்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை-

இதுபற்றி நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்-

"ஒரு முஸ்லிம துஆச் செய்கிறார்- அவர் இரத்த சமபந்தத்தை மறிக்கவும இல்லை-

எவ்விதமான பாவ காரியத்தை குறித்துக் கேட்கவும இல்லை-

அவ்விதமாயின் அவருக்கு மூன்று விடயங்களில் ஒன்று கிடைத்தே தீரும-

"அதாவது அவர் எதனை நினைக்க துஆ செய்தாரோ அது அவருக்குக் கிடைத்துவிடுகின்றது-

அல்லது அதற்குப் பதிலாக அவருக்கு ஏற்படவிருக்கும துன்பம அகற்றப்படுகின்றது-

அல்லது அந்த அளவில் அவருக்கு நன்மையளிக்கப்படுகின்றது

மேற்கூறிய ஹதீஸில் இருந்து எமது பிரார்த்தனைகள் முக்கியத்துவம நன்கு விளங்குகின்றதல்லவா?

எனவே நோன்பு திறக்கும நேரத்தை எமது பிரார்த்தனைக்குரிய நேரமாக மாற்றிக் கொள்வோமாக- [-223]

— எம ஜே எம தாஜுதீன் —

---

துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வரவேற்பு வைபவம எதிர்வரும மே மாதம 6ஆம திகதி நடைபெறும. இவ்வைபவத்தினை தேசிய கல்வி ஊழியர் சங்கம மேற்கொண்டு வருகின்றனர்.

பெரிய கிண்ணியா, ஐ தே கட்சி கிளைகள் வாலிப இயக்கங்கள், கட்சியின் ஆதரவாளர்கள் ஒன்று சேர்ந்து இவ்வரவேற்பை நடத்தவுள்ளனர். (ஐ-151)

## புடைவை விலை உயர்வு

வறக்காப்பொளை ஏப் 21

நோன்புப் பெருநாள் முன் வருவதையிட்டு இந்திய சாரம, வொயில் ஸாரிகள் என்பன திடுதிப்பென விலை உயர்ந்துள்ளன.

கடந்த மாதம 175 ரூபாவுக்கு வாங்கக் கூடியதாக இருந்த ஒரு இந்திய சாரம தற்போது 265 ரூபாவாக விலை ஏறி உள்ளது.

இதே போன்று 150 ரூபாவுக்கு இருந்த வொயில் ஸாரி 250 ரூபாவுக்கும் மேலாக விற்கப்படுகிறது. (ஐ-333)

# பாக்.—பாரத படைகள் எல்லையில் மோதல்

## பாகிஸ்தான் தரப்பில் சிலர் மரணம் இந்திய தரப்பு பற்றி தகவல் இல்லை

புதுடில்லி, ஏப். 22

காஷ்மீரைப் பிரிக்கும் எல்லைக் கோட்டில் இந்தியத் துருப்புகளுக்கும், பாகிஸ்தானியத் துருப்புகளுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை துப்பாக்கிச் சமர் நிகழ்ந்தது. பாகிஸ்தானியத் தரப்பில் சிலர் மரணமானார்கள். இந்தியத் தரப்புபற்றித் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

காஷ்மீரைப் பிரிக்கும பஞ்ச் பகுதியிலுள்ள பக்லயர்தார என்ற இடத்திலேயே இந்த மோதல் ஏறபட்டது.

இந்த மோதலின் போது இந்தியத் தரப்பிலும உயிரிழப்பு நிகழ்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆயினும மேலதிக விவரம தெரிவிக்கப்படவில்லை.

இந்தப் பகுதியில் இரு நாட்டு துருப்புகளும அநேகமாக தினம தினம துப்பாக்கிப் பிரயோகம செய்து கொள்கின்றன. ஆனால் உயிரிழப்பு ஏற்படுவது மிக அரிது.

காஷ்மீரை ஆஸாத் காஷ்மீர் எனவும ஜமமு காஷ்மீர் எனவும பிரிக்கும எல்லைக் கோட்டை ஐ நா அதிகாரிகள் மேற்பார்வை செய்து வருகிறார்கள்.

ஜமமு காஷ்மீரில் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டஙகளும, கிளர்ச்சிகளும இடமபெற்று வருவது, இரு நாடுகளுக்கும இடையே நாலாவது யுத்தம ஒன்றுக்கு வழி வகுத்து விடுமோ என்று அஞ்சப்படுகிறது.

கடந்த ஒரு சில வார காலமாக பாகிஸ்தானும, இந்தியாவும பரஸ்பரம குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வருகின்றன. யுத்தத் தயாரிப்புப் பற்றியே அவை குற்றம சாட்டி வருகின்றன.

எல்லைப் புறத்தில் துருப்புகள் குவிக்கப்படுகின்றன என்றும அவை பரஸ்பரம புகார் தெரிவித்திருக்கின்றன.

ஜமமு காஷ்மீரில் மத்திய அரசின் நிர்வாகத்திற்கு எதிரான தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆயுதஙகளை வழஙகுகிறது எனவும தெரில்லாப் பயிற்சியை அளிக்கிறது என்றும இந்தியா குற்றம சாட்டியிருக்கிறது.

கடந்த ஜனவரி நடுப்பகுதியில் ஆரமபமான காஷ்மீர் கிளர்ச்சியில் இதுவரை சுமார் 300 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

காஷ்மீரின் 1/3 பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும பாகிஸ்தான் இந்தியாவின் குற்றச்சாட்டை மறுக்கிறது.

இந்தியா தற்போது காஷ்மீரில் சுமார் 2,00,000 துருப்புகளைக் குவித்து வைத்திருக்கிறது.

(ண)

### சீக்கியர் தாக்குதல் தீவிரம்

அமிர்தசரஸ், ஏப் 22

பஞ்சாப் மாநிலத்திலுள்ள இந்து சமூகத்தவர்களின் அகதி முகாம ஒன்றின் மீது சீக்கியத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் 4 பேர் மரணமானார்கள். ஏழு பேர் காயமுற்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இத்தாக்குதல் நடைபெற்றது.

சீக்கியத் தீவிரவாதிகளின் வன்செயல்களை அடுத்து பத்தாலா அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்தவர்கள் மீதே இந் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கும, பாகிஸ்தானுக்கும இடையில் நெருக்கடிகள் முற்றி வரும வேளையில் சீக்கியத் தீவிரவாதிகள் தமது வன்முறைகளை கடந்த சில வார காலமாக தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

இமமாத முற்பகுதியிலும சீக்கியத் தீவிரவாதிகள் பத்தாலாவில் இந்து சமய ஊர்வலம ஒன்றில் குண்டு ஒன்றை வெடித்தார்கள்.

இச்சமபவத்தின் பின்னர் பனிபட் பட்டினத்திலும, பதன் கோட்டிலும பஸ்களில் குண்டு வெடிப்புகள் இடமபெற்றன.

இச்சமபவஙகளில் முறையே 12 பேரும, 13 பேரும மரணமானார்கள்.

(ண)

## உலகச் செய்திகள்

### மதம் மாறிய கணவன் விவாகரத்து செய்ய மனைவிக்கு அனுமதி மறுப்பு

கெய்ரோ, ஏப் 22

கணவன இஸ்லாத்திற்கு மதம மாறி விட்டார். மத மாற்றத்தை முகாந்திரமாக வைத்து கிறிஸ்தவ மனைவி விவாகரத்துக்கு அனுமதி கோரி மேன்முறையீடு செய்தார். அவருடைய மேன்முறையீட்டை குடுமப விவகாரஙகளுக்கான எகிப்திய நீதிமன்றம நிராகரித்து விட்டது.

இச்செய்தியை எகிப்தியன் கஸெட் என்ற ஆஙகிலத் தினசரி கடந்த சனிக்கிழமை வெளியிட்டது.

அந்தப் பெண் ஏற்கனவே கீழ் நீதிமன்றம ஒன்றில் விவாகரத்துக் கோரி மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை குடுமப விவகாரஙகளுக்கான நீதிமன்றம ஏற்றுக் கொண்டிருக்கிறது.

கணவன் இஸ்லாத்தை தழுவியதையடுத்து அவருக்கு மனைவி தொடர்ந்தும கீழ்ப்படிய வேண்டும என்று நீதிமன்றம அதன் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது.

விவாகரத்துச் செய்ய அந்த மனைவிக்கு உரிமை இல்லை என்றும தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

ஆயினும கணவனுக்குப் பதிலாக மனைவி இஸ்லாத்திற்கு மாறியிருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும என்று நீதிமன்றம தெரிவித்திருக்கிறது.

மனைவி மதம மாறி, அவரைப் பின்பற்ற கணவன் மறுத்தால், கணவன் விவாகரத்து செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவார்.

முஸ்லிம பெண் ஒருவர் முஸ்லிம அல்லாத ஒருவரைத் திருமணம செய்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார் என்பதே இதற்குக் காரணமாகும என்று நீதிமன்றம தெரிவித்திருக்கிறது.

முஸ்லிம ஆடவர் ஒருவர் கிறிஸ்தவ அல்லது யூத மனைவியை வைத்திருக்க இஸ்லாமியச் சட்டம அனுமதி அளிக்கிறது.

(ண)



### சுழியோடிகளுக்கு நவீன ஆடை

ஆழ்கடல் சுழியோடிகளுக்கான நவீன விஞ்ஞான நுட்ப உடையையே படத்தில் காண்கிறீர்கள். இந்த உடையை அணிந்து கொண்டு 300 மீட்டர் ஆழம வரை நீரில் சுழி ஓடலாம. ஆழம கூடக்கூட அமுக்கம கூடுவதால் ஏற்படும தடஙகல்களை இந்த ஆடை நிவர்த்தி செய்கிறது.

(ண)

### நாஸிகள் வன்முறை

பெர்லின், ஏப் 22

ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் 101 ஆவது பிறந்த தினம இவ்வார இறுதியில் கொண்டாடப்பட்டது. கிழக்கு பெர்லினும, மேற்கு பெர்லினும அவ்வமையம கலகஙகளால் அதிர்ந்தன.

கிழக்கில் நூற்றுக்கணக்கான இளைஞர் கூடி நாஸி சுலோகஙகளை எழுப்பினர். அதனை அடுத்து அண்மையில் நின்றோரைத் தாக்கினர், "துருக்கியரையும, கமயூனிஸ்டுகளையும அழிக்குக," என்று கூத்தினர். இச்சந்தர்ப்பத்தில் தாக்குதல் நடக்க,

### கிறிஸ்தவ தேவாலயம் மீது கைக்குண்டு வீச்சு

ஒரு பொலிஸ், 2 படைவீரர்கள் மரணம்

லேயே இத்தாக்குதல் இடம பெற்றிருக்கிறது—

சனூர் என்ற கிராமத்தில் உள்ள செனமேரிஸ் தேவாயத்திற்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவரே இந்தக் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர்—

### வங்காள தேச மலைஜாதி கெரில்லா கிளர்ச்சி தீவிரம்

## ஒரு பொலீஸ், 2 படைவீரர்கள் மரணம்

கெய்ரோ ஏப் 22

கெய்ரோவுக்கு தெற்கே 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மீது நான்கு நாட்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரு பொலீஸ்காரரும் இரண்டு இராணுவ வீரர்களும மரணமானார்கள்—

இத்தாக்குதல் நடத்தியவர்களைத் தேடி வலைவிரிக்கப்பட்டிருக்கிறது— ஆயினும அவர்கள் இன்னமும கைது செய்யப்படவில்லை—

எகிப்திய உள்துறை அமைச்சு இதனை கடந்த சனிக்கிழமை தெரிவித்தது—

"பையும்" என்ற இடத்தி[ல்] கைக்குண்டுத் [தாக்குதல் நடத்]தினர்—

காவல் கடமையில் இருந்த பொலீஸார் ஒருவரும இரண்டு இராணுவ வீரர்களும் இதில் மரணமானார்கள்—

கிறிஸ்தவர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையஙகள் மீது சமீபகாலமாக முஸ்லிம தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது— [ண]

---

## ஒரு வார காலத்தில் 30 பேர் கொலை

டாக்கா, ஏப் 22

வஙகாளதேசத்தின் சிட்டாகொங மலைப் பிரதேசத்தைத் தமது தாயகமாகக் கோரி பிரிவினைப் போராட்டம நடத்திவ்ரும "சக்மா" மலைஜாதி பௌத்த சமூகத் தீவிரவாதிகள் தமது கெரில்லாப் போராட்டத்தை முடுக்கி விட்டிருக்கிறார்கள்—

கடந்த ஒரு வார காலம நீடித்த கெரில்லாக்களின் தாக்குதல்களில் இதுவரை குறைந்த பட்சம் 30 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்—

இத்தகவலைப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்கள்—

கடந்த வெள்ளிக்கிழமை குக்ஹாவாஹி மாவட்டத்தில் "சாந்தி பாஹினி" என்ற தடை செய்யப்பட்ட கெரில்லா இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 4 நீர் மாணத்துறை தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள், மூவர் காயமுற்றார்கள்—

கடந்த செவ்வாய்க்கிழமை அரசாஙகத் தொழிலாளர்கள் மீது பிரிவினைவாதிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர்,

இச்சமபவத்தில் குறைந்த பட்சம 19 பேர் மரணமானார்கள், கொல்லப்பட்டவர்கள் அத்தனை பேரும வஙகாள குடியேற்றக்காரர்கள் ஆவர்—

கடந்த வியாழக்கிழமை "ரங்காமதி" பட்டினத்திற்கு 25 மைல் தொலைவில் கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தியதில் 7 பேர் கொல்லப்பட்டார்கள்—

கெரில்லாக்களின் வன்முறைச் சம்பவஙகள் அதிகரித்து வருவதையடுத்து சுமார் 2000 குக் கிராமவாசிகள் அகதிகளாக பாதுகாப்பான இடஙகளுக்குச் சென்றிருக்கிறார்கள்— (ண)

---

தர்ப்பத்தில் தாக்குதல் நடக்க, சிலர் காயமுற்றனர் என்று செஞ்சிலுவைச் சஙகத்தினர் கூறினர், பொலீஸார் தலையிட்டு கலகத்தைத் தடுத்து நிறுத்தினர். (ண—ரி)

---

## டாக்காவில் இந்திய எதிர்ப்பு ஊர்வலம்

டாக்கா, ஏப் 22

காஷ்மீரை இந்தியா கைப்பற்றி வைத்திருக்கிறது என்றும் அரபு பிரதேசஙகளை இஸ்ரவேல் கைப்பற்றியிருக்கிறதென்றும கூறி சுமார் 5000 வஙகாளதேச முஸ்லிமகள் கடந்த வெள்ளிக்கிழமை டாக்காவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம ஒன்றை நடத்தினார்கள்—

இந்த ஊர்வலத்திற்கான ஏற்பாடுகளை "இஸ்லாமி அரசமைப்பு" இயக்கமும் ஈரானிய ஆதரவுக் குழுவொன்றும இணைந்து செய்திருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது—

காஷ்மீரில் இனப் படுகொலை நடைபெறுகிறது என்று கூறி வஙகாளதேசத் தீவிரவாதிகள் அநேகமாகத் தினம தினம் எதிர்ப்புக் கூட்டஙகளை நடத்தி வருகின்றனர்—

அவர்கள் காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்— [ண]

---

## உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கும்

எதிர்வரும ரமழான் பெருநாளை முன்னிட்டு பாவனையாளர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி விநியோகிக்குமாறு வர்த்தகத் துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவரைப் பணித்திருக்கிறார்—

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சில்லறை விற்பனை நிலையஙகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன—

இதனை அடுத்தே, அமைச்சர் ஜனாப் மன்சூர், அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடின்றி விநியோகிக்குமாறு அதிகாரிகளை பணித்துள்ளார்—

முஸ்லிமகள் தமது நோன்புப் பெருநாளை கொண்டாடுவதற்கு வசதியாக இறக்குமதி செய்யப்பட்ட புடைவை வகைகளை தாராளமாக விநியோகிக்குமாறும் அவர் சதொச நிறுவன தலைவருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்— (ண—வ)

---

## முஸ்லிம் சேவையில் இன்று: லைலத்துல் கத்ர் நிகழ்ச்சி

இன்று 23ஆம திகதி புனித லைலத்துல் கத்ர் இரவை முன்னிட்டு வானொலி முஸ்லிம சேவையில் விசேட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும, நிகழ்ச்சிகள் இரவு 11 மணி முதல் அதிகாலை 5 மணி வரை ஒலிபரப்பாகும.

நிகழ்ச்சி விவரம வருமாறு—

11—02 கிறாத்— எகிப்திய அரபுக்குடியரசு காரி இப்றாஹீம அல்—மன்சூர்.

11—15: நேர்முக அஞ்சல்— கன்னத்தோட்டை ஜும்மாப் பள்ளிவாசல் புனித லைலத்துல் கத்ர் விசேட நிகழ்ச்சி.

12—15: ஹிஸ்புல் குர்ஆன்— காரி எம எம ஸக்கரிய்யா.

1—30: பேச்சு— "புனித லைலத்துல் கத்ர்"

1—40: ஹிப்ழுல குர்ஆன்— அல்—ஹாபிஸ் ஏ சி எம அஷ்ரப், அல்—ஹாபிஸ் எஸ் ஏ, லத்தீப்,

2—30 கஸீதா

2—45 தர்ஜமதுல் — குர்ஆன்— காரி எம எம ஸக்கரிய்யா, அல்—ஹாபிஸ் எஸ எம ஹனிபா

3—15 சஹ்ர் சிந்தனை— மௌலவி எம எம ஏ முபாறக்

3—30 மதளபா— கதீப் அல்—ஹாஜ் ஏ எஸ் எம சுலதான்,

4—00: துஆ

4—30: கிறாத்

4—40; சுபுஹ தொழுகைக்கான அஸான்

4—45: ஸலவாத்

4—50: ஒலிபரப்பு முடிவு.

(ண—007)

---

## ஸ்ரீ நகர் செல்ல இந்து அதிகாரிகள் மறுப்பு

ஜம்மு ஏப் 22

ஜமமு — காஷ்மீர் மாநில அரசில் கடமைபுரியும் நூற்றுக்கணக்கான இந்து அதிகாரிகள் மாநில தலைநகர் ஸ்ரீநகருக்குச் சென்று பணிபுரிய மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள்—

முஸ்லிம தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு தாம ஆளாகலாம என்று அவர்கள் அச்சம தெரிவித்திருக்கிறார்கள்—

தமமை ஸ்ரீநகருக்கு அனுப்பக் கூடாது என்று வலியுறுத்தி அவர்கள் ஜம்முவில் பல தடவை ஆர்ப்பாட்டஙகளை நடத்தியிருக்கிறார்கள்,

காஷ்மீருக்கு சுதந்திரம வழஙக வேண்டும என்று கோரும முஸ்லிம தீவிரவாதிகள் பெரும் எண்ணிக்கையான இந்து — முஸ்லிம வர்த்தகர்களைக் கொலை செய்திருக்கிறார்கள்—

வன்முறைக்கு அஞ்சி சுமார் ஒரு லட்சம் இந்துக்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்— [ண]

---

## எயிட்ஸ் மரணங்கள் 10 லட்சத்தை எட்டும்

பாரிஸ், ஏப் 22

எயிட்ஸ் நோயினால் வருடாந்தம மரணமாவோரின் எண்ணிக்கை 2000 ஆம ஆண்டு காலத்தில் 10 லட்சத்தை எட்டிவிடலாம.

இப்படி உலக சுகாதார ஸ்தாபன இயக்குநர் நாயகம ஹிரோஷி நாகஜிமா கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்,

இச்செய்தியை பிரெஞ்சுத் தினசரியான "ல மொண்ட்" வெளியிட்டிருக்கிறது,

எயிட்ஸ் நோய்க்கும, வறுமைக்கும இடையிலான தொடர்பை உலக சுகாதார ஸ்தாபன இயக்குநர் நாயகம கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

வறிய நாடுகளின் சமூக நிலைமைகள் சீராக்கப்படின் எயிட்ஸ் நோயால் மரணமாவோரின் எண்ணிக்கையை குறைக்க முடியும என்றும அவர் தெரிவித்தார். (ண)

# வடமேல் மாகாணம் உல்லாசபுரியாகும்

## வெளிநாட்டவரைக் கவர்ந்திழுக்க புதிய திட்டம் உருவாகும்

கொழும்பு ஏப் 22

வடமேல் மாகாணத்தை வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு பிரதேசமாக மாற்றியமைக்கும் வகையில் பாரிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கென தனியார் துறையின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படும்.

வடமேல் மாகாண முதல்வர் காமினி ஜயவிக்ரம பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்து ஒரு மாத காலத்துக்குள் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் வகையில் உல்லாசப் பயண சபைத் தலைவர் பிரேமா பெர்னாண்டோவின் தலைமையில் ஆறு பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இப்பாரிய திட்டத்தின் கீழ் கல்பிட்டி கடற்கரைக்கு அப்பால் அமைந்துள்ள சின்னஞ் சிறிய தீவுகளில் உல்லாச ஹோட்டல்கள் மாலைதீவு பாணியில் அமைக்கப்படும்.

பன்னல குருநாகல் பாதையில் உள்ள கங்காணி முல்லை பகுதியின் இரண்டாயிரத்து 500 ஏக்கர் விஸ்தீரணக் காடு சரணாலயமாக அறிவிக்கப்பட்டு இப்பகுதியில் உல்லாசப் பயணிகளுக்காக வனசுற்றுலாக்கள் நடத்தப்படும்.

வில்பத்து தேசிய பூங்காவுக்கான நுழைவாசல் ஒன்று வனாத்த வில்லுவிலும் திறக்கப்படும்.

பண்டைய இராச்சியங்களான யாப்பாவுவ, தம்பதெனிய, பண்டுவஸ்நுவர மற்றும் குருநாகல் ஆகியவற்றின் சிதைவுகள் வெளிநாட்டு பயணிகளைக் கவரும் வகையில் பராமரித்து பாதுகாக்கப்படும்.

இப்படி இத்திட்டம் பற்றி தகவல் தெரிவித்துள்ள மாகாண முதலமைச்சர், மூன்று மாத காலத்துக்குள் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்று நம்பிக்கை தெரிவித்தார். (ஐ-032)



## ஊனமுற்றோருக்கு வீடுகள்

கடமையின் போது அவயவங்கள் ஊனமுற்ற கடற்படை வீரர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க கடற்படையின் சேவா வனிதா இயக்கம் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

அந்தத் திட்டத்தின் கீழ் 8ஆவது வீடு குருநாகல் மல்கடுவாவையில் வைத்து கடற்படை அதிகாரி ஜனாப் ரீ எம் என் ரீ எம் என் அப்துலுக்கு வழங்கப்பட்டது.

வீடு கையளிக்கப்பட்டு ஏற்றிய குத்து விளக்கின் அருகே கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வாவும், சேவா வனிதா அமைப்பின் தலைவி திருமதி சித்ரா சில்வாவும், ஜனாப் அப்துலும் காணப்படுகிறார்கள். (ஐ-ற)

## மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முழு பங்கு செலுத்துவோம்

— அய்யாத்துரை

அட்டன் ஏப் 21

கடந்த இருபத்தினான்கு ஆண்டுகளாக தோட்டத் தொழிலாளர்களின் மேன்மைக்காகவும், மலையக மக்களின் உரிமைக்காகவும் எவ்விதம் தொழிலாளர் தேசிய சங்கம் போராடி வந்துள்ளதோ அதேபோல எதிர்காலத்தில் அரசியல் கட்சி என்ற அடிப்படையில் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் எமது பங்கை முழுமையாக செலுத்துவோம்

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு டி அய்யாத்துரை பத்தனை மாவட்டத்தில் புதிய அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்து பேசும்போது குறிப்பிட்டார்.

இத்திறப்பு விழாவுக்கு மாவட்டத் தலைவர் திரு ஆர் செல்லையா தலைமை வகித்தார்.

தொடர்ந்து திரு டி. அய்யாத்துரை ... சங்கமே முக்கிய காரணம் என்பதை மாற்று இயக்கத்தினரும் ஏற்றுக் கொள்வர்.

தொழிலாளர்களை தோட்டத்தை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் சேவைக்காலப் பணமும், நஷ்டஈடும் வழங்க வேண்டுமென்று முதன் முதலாக 1968 ஆம் ஆண்டு மஸ்கெலியா ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட பெரிய மஸ்கெலியா கங்குவத்தை தோட்டத் தொழிலாளர்களின் சார்பில் வாதாடி சாதனையை நிலைநாட்டினோம்.

இன்று சங்கத்திற்கு சொந்தமாக பத்து லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த நான்கு கட்டிடங்களை நான்கு மாவட்டங்களில் வாங்கி தொழிலாளர் வரலாற்றில் ஓர் புதிய திருப்பு முனையை நமது சங்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

இக்காரியாலயங்கள் மஸ்கெலியா, சாமிமலை, பொகவந்தலாவ, புளியாவத்தை போன்ற இடங்களில் தற்போது இயங்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்...

## அப்புத்தளை ஒஹிய தேயிலை தோட்டம்

## நாட்டின் சமாதானத்துக்கு சாதி, மத, இன, மொழி பேதங்களை மறந்து ஓரணியில் திரள வலியுறுத்து

எட்டியாந்தோட்டை ஏப் 21

ஒரு நாட்டின் அபிவிருத்தியும், சுபீட்சமும் அந்நாட்டில் நிலவும் சாந்தி, சமாதானம் ஐக்கியம் என்பவற்றில் அமைந்துள்ளதால் இலங்கை மக்களாகிய நாம் சாதி, மத இன, மொழி பேதங்களை மறந்து அனைவரும் ஓரணியில் திரள திடசங்கற்பம் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பாரத் லங்கா நட்புறவு சம்மேளனத்தின் துணைத் தலைவர் திரு ஆ தியாகராஜா சம்மேளனப் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் கூறியதாவது-

நாம் இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்டிருக்கலாம். ஆனால் நாமனைவரும் இலங்கைத் திருநாட்டின் மைந்தர்களே,

நாமனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நமது பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

சுயதொழில் வேலை வாய்ப்பு கைத்தொழில் போன்ற இன்னோரன்ன திட்டங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சி நமது வளர்ச்சி என்ற எண்ணம் இதயத்தில் எழ வேண்டும்.

சொல்லிலும் செயலிலும் ஒரே மாதிரியாக செயற்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு அவர் கூறினார். (ஐ-346)

## மத்திய மாகாண சபையில் கேட்டவை

— கண்டி —

முதலமைச்சர் திரு டபிள்யூ பீ பீ திஸாநாயக்க-

இனரீதியாக நாம் எதையும் பிரித்துப் பார்க்கக் கூடாது, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக முஸ்லிம்களும் தமிழர்களும் சிங்களவர்களுடன் நட்புறவாக வாழ்ந்து வந்திருக்கின்றனர்,

ஜனாப் எச் எம் பாருக் (ஸ்ரீ ல மு கா)-

நீங்கள் இப்படிக் கூறுகிறீர்கள். கடந்த காலத்தில் வீடமைப்புத் திட்டம் போன்றவற்றில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த பங்குதான் என்ன?

முதலமைச்சர் திரு திஸாநாயக்க- மாத்தளை நகரில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கிறார்கள். இதே போன்று அனைவருக்கும் நாம் உதவ வேண்டும்.

ஜனாப் பாருக்-

அப்படியாக எதுவும் முஸ்லிம்களுக்கு நடைபெறவில்லையே. அருப்பொளையில் முஸ்லிம்கள் பரவலாக வாழ்கிறார்கள், அவர்களின் ஐவேளை தொழுகைக்காக பள்ளிவாசல் ஒன்றை அப்பகுதி முஸ்லிம்கள் நிர்மாணித்தார்கள். இரவிரவாக அதனை தரைமட்டமாக்கி விட்டனர் ஒரு பகுதியினர். இது நியாயமா?.

முதலமைச்சர்-

ஏன் நான் கம்பளைக்கு அருகில் ஹிஜ்ராபுர என்ற பகுதியில் ஒரு பள்ளிவாசலை நிர்மாணிக்க உதவி புரிந்துள்ளேன், ஓர் இஸ்லாமியனாக இல்லாதபோதும் கூட பேதம் பாராமல் செய்திருக்கிறேன், இது உங்களுக்குத் தெரியாதா?

ஜனாப் பாருக்-

தேர்தலில் ஆதாயம் பெற அது நடைபெற்றிருக்கலாம் (சிரிப்பு)

முதலமைச்சர்-

நீங்கள் அங்கு சென்று பாருங்கள்.

ஜனாப் பாருக்-

அருப்பொளையில் தகர்க்கப்பட்ட பள்ளிவாசலை நிர்மாணித்துத் தருவதாக அரசு கூறியது அது நடைபெறவில்லை. ஒரு புறம் இப்படிக் கூறுகிறார்கள். மறுபுறம் அதை நிர்மாணிக்கவும் விடுகிறார்கள் இல்லை, எமக்கு அநீதி இழைக்கப்படுவதால் தான் வீடமைப்புத் திட்டம் போன்றவற்றை வலிந்து கேட்க வேண்டியுள்ளது,

திரு வீ அண்ணாமலை (ஐ தே க)

## மக்களும் பதவியும்

### ஊவா மலே சங்க நிர்வாகிகள்

பதுளை ஏப் 20

ஊவா மலே சங்கத்தின் 29 ஆவது வருடாந்த கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்-

தலைவர் ஜனாப் டி எச் பீ சால்-

உப தலைவர்கள் ஜனாபா கலிகா கமால் ஜனாபா ஜி பி ஒஸ்மான், ஜனாபா ல்ராம சாலி, ஜனாப்கள் ஏ எம் அஹமத், எம் நஸார் பொங்சோ, நிஸாம் பூசோ, ஏ டபிள்யு காசிம், எம் ஏ ஜலீல், எம் எச் சமசுதீன்-

செயலாளர் ஜனாப் டி எம் சரப், பொருளாளர் ஜனாப் மோகன் சலிஹீன், உப செயலாளர் ஜனாப் ஐ நிஜார்தீன், உப பொருளாளர் ஜனாப் மொஹாலின் காசிம், கணக்காளர் ஜனாப் எம் டி எப் ரஹீம்- (ஐ-037)

### வறுமை ஒழிப்பு நடவடிக்கை

மீரிகம ஏப் 21

கள்எலிய பகுதியில் வதியும் முஸ்லிம்கள் இடையே வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் கள் எலிய பைத்துல்மால் நிதியம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் இந்நிதியம் சேகரித்த சுமார் ஒரு லட்சம் ரூபா பணத்தில் இருந்து காணியற்றவர்கள் சிலருக்கு காணிகளை வாங்கவும், வறிய முஸ்லிம்கள் வீடுகளை அமைப்பதற்கும் உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-403)

### பாதிப்புற்றோர் விவரங்கள் சேகரிப்பு

மூதூர் ஏப் 21

இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படையினர் நிலை கொண்டிருந்த காலத்தில் மூதூர் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டோரின் விவரங்களைச் சேகரிப்பதில் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் இந்நடவடிக்கையை தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படையினரால் தாக்குதல்களுக்கு உள்ளானவர்கள் தமது பெயர்களை தமிழ் ஈழவிடுதலைப் புலிகளிடம்...

...லியா தலைமை வகித்தார்.

தொடர்ந்து திரு டி. அய்யாத்துரை பேசும் போது கூறியதாவது:

தொழிலாளர்களுக்கு சேவைக் காலப் பணம் கிடைப்பதற்கும், சேமலாப நிதி முழுமையாக இன்று கிடைப்பதற்கும் எமது

...இடங்களில் தற்போது இயங்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இப்போது நமது சங்கம் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் எமது கடமையும், பொறுப்பும் அதிகரித்துள்ளன என்பதை இத்தருணத்தில் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

திரு டி அய்யாத்துரை தனது உரையில் இப்படிக் குறிப்பிட்டார்.

இத்திறப்பு விழாவில் சங்கப் பொதுச் செயலாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான திரு பி வி கந்தையா தொழிலுறவுச் செயலாளர் திரு எம் எஸ் துரைசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ஐ-096)

## அடையாள கார்ட்டுகள் கண்டெடுப்பு

கொழும்பு ஏப் 22

கடந்த காலங்களில் தீவிரவாதிகளினால் அபகரிக்கப்பட்ட ஒருதொகை தேசிய அடையாள கார்டுகளை வயலில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் பொலீஸார் கண்டெடுத்தனர்.

வாத்துவை, நுகேகொட பகுதியில் தீவிரவாத சந்தேக நபர் ஒருவரின் வீட்டுக்கு அருகிலுள்ள வயலிலேயே இவை புதைக்கப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

வாத்துவைப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த பொத்துபிட்டிய, பனாப்பிட்டிய ஹொல்பிகொட, ஆகிய பகுதி மக்களின் தேசிய அடையாள கார்டுகளே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள கார்டுகளை வாத்துவை பொலீஸார், உரிமையாளர்களிடம் வழங்கி வருகின்றனர்.

(ஐ-வ).

# தேயிலை தோட்டம் மூடப்பட்டுள்ளது குறித்து

### ரஞ்சனுக்கு ஆட்சேபனை கடிதம்

## இ. தொ. கா. அனுப்பியது

பதுளை ஏப் 21

அப்புத்தளை ஒஹிய தேயிலை தோட்டம் மீண்டும் மூடப்பட்டுள்ளது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சேபனை கடிதமொன்றையும் அவசர தந்தியொன்றையும் தோட்டத் தொழிற்றுறை அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்னவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இ தொ கா துணைப் பொதுச் செயலாளர் திரு டி வி சென்னன் இது சம்பந்தமாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

முன்பு ஒரு முறையும் ஒஹிய தேயிலை தோட்டம் மூடப்பட்டது. இ தொ கா இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து 1987 ஆம் ஆண்டு இத்தோட்டம் திறக்கப்பட்டது.

ஆனால் எக்காரணமுமின்றி இத்தோட்டம் மீண்டும் மூடப்பட்டுள்ளதால் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே அமைச்சர் இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு தொழிலாளர்களுக்கு வேலை வழங்குமாறு அக்கடிதத்தில் திரு சென்னன் வலியுறுத்தினார்,

ஒஹிய தேயிலை தோட்டம் திறக்கப்படாவிட்டால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தவறாது எனவும் திரு சென்னன் தினபதிக்குத் தெரிவித்தார்.

(ஐ-037)

## பரீட்சைக்குத் தோற்றி வேலையற்றிருப்போருக்கு தொழில்நுட்பப் பயிற்சி

கல்முனை ஏப் 21

க பொ த (சா,த) பரீட்சைக்குத் தோற்றி விட்டு வேலையற்று இருப்பவர்களுக்கு கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் தொழில் நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படவிருக்கின்றன.

மோட்டார் இயந்திரவியல், சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்), வீட்டு மின் உபகரணம் திருத்துதல், சுருக்கெழுத்து, தட்டச்சு (தமிழ்) ஆகிய நெறிகளில் இவர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்படும்.

பயிற்சி நெறிகள் ஒவ்வொன்றும் 8 மாத காலத்திற்கு நடைபெறும், சனி, ஞாயிறு தினங்களில் முழுநேரம் அல்லது சனி, ஞாயிறு, திங்கள் செவ்வாய் தினங்களில் மாலை நேரங்களில் வகுப்புகள் நடைபெறும்,

1990-05-05 ஆம் திகதி ஆரம்பமாகும், இப்பயிற்சி நெறிகளுக்கு 1990-4-28 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

"அதிபர் ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை" என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

(ஐ-281)

...கேட்க வேண்டியுள்ளது,

திரு வீ அண்ணாமலை (ஐ தே க)

வீடமைப்பு திட்டத்தில் தமிழர்களின் நலனும் பேணப்பட வேண்டும். எல்லாமே சிங்களவர்களுக்கு என்ற எண்ணம் பெரும்பான்மை மக்களிடம் இருப்பது சரியல்ல, பலமேலகலையில் கம உதாவ வீட்டுத் திட்டத்தில் தமிழர்களுக்கு எதுவும் இல்லை.

ஜனாப் பாருக்-

முஸ்லிம்கள் இந்த நாட்டில் பிரிந்து வாழ விரும்பியதே கிடையாது, அப்படி வாழவும் மாட்டார்கள், அவர்களின் சமய கலாசார கோட்பாடுகளுக்கு அமைய ஏனையோருக்குத் தொல்லை கொடுக்க முடியாத வகையில் பரந்து வாழும் இவர்களுக்கு இழைக்கப்படும் அநாதாரணம் ஒழிக்கப்பட வேண்டும், மாத்தளை மாவட்டத்தில் 14,500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன, இவற்றில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த வீடுகள் எத்தனை?

முதலமைச்சர்-

இந்நாட்டில் இன்றைய ஆட்சியில் எவரும் இரண்டாம் தர பிரஜையாக இருக்க இடமில்லை, நான் கற்ற பாடசாலையில் குமாரவேலும் கதிரேசனும் என்னோடு இணைந்து கற்றனர். அப்பொழுது எம் மத்தியில் பேதம் இருக்கவில்லையே, நான் தமிழ் பேசுவேன் அவர்கள் சிங்களம் பேசுவர். இந்த மனமாற்றம் தான் எமக்கு வேண்டும்.

திரு ஓ ஏ இராமையா (ஐ சோ மு)-

காணிகள், தொழில் வாய்ப்புகள் வீட்டு வசதிகள் எல்லாம் இன விகிதாசார அடிப்படையில் வழங்குங்கள்.

திரு லயனல் செனவிரட்ன (ஐ தே க)-

மாத்தளை முஸ்லிம்கள் நகரில் மாநகர சபை வீடுகளில் தான் வசிக்கிறார்கள், 28,000 பேரில் முஸ்லிம்கள் 5000 பேர் மாத்திரமே வாக்காளர்கள்.

திரு அசோகா சுரவீர (ஐ சோ மு)-

இளைஞர்களின் பிரச்சினையைத் தீர்க்க நாம் பிந்தி விட்டோம்.

திரு டபிள்யூ ரட்ணம் (ஐ தே க)-

இந்தச் சபை தீர்மானங்களை நிறைவேற்றுகிறது, ஆனால் நடைமுறையில் ஒன்றுமே இல்லை.

திரு ஜே பீ திஸாநாக்க (ஐ சோ மு குனிஷ்ட)-

இது உங்களின் அரசாங்கம் தானே.

முதலமைச்சர்-

திரு திஸாநாயக்க எனது கௌரவத்துக்கு உரித்தானவர், தூங்கும் பொழுது என்னைத் தட்டி எழுப்புபவர். அவர் மாத்திரமே (சிரிப்பு)

(ஐ-017)

...கள் தமது பெயர்களை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடம் பதிவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். (ஐ-401)

## பயிலுநர் ஆசிரியர்: மார்ச், ஏப்ரல் சம்பளம் கூட்டாக

மூதூர் ஏப் 21

திருகோணமலை மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதச் சம்பளங்களை கூட்டாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை, மூதூர், கந்தளாய், கோமரன்கடவல முதலான கோட்டக் கல்வி அலுவலகங்கள் மூலம் இவ்வாசிரியர்களுக்கான ஊதியக் கொடுப்பனவுகளை வழங்க திருகோணமலை மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே தியாகராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ஐ-401)

## மின்சார வசதி இல்லை

மூதூர் ஏப் 21

மூதூர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு மின்சார வசதி வழங்கப்படவில்லை.

இவ்வலுவலகத்தில் மின்சார வசதியின்மையால் இங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள் வெப்பம் மிகுந்த வேளையிலும், மந்தாரமும் மழையும் உள்ள காலங்களிலும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பணிபுரிய வேண்டியுள்ளது. (ஐ-401)

# மாவட்ட ரீதியாக கரபந்தாட்ட ஒன்றியங்கள்

## கரப்பந்து சம்மேளனம் நடவடிக்கை

கொழும்பு, ஏப்- 22

கரபந்தாட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் ஒரு நடவடிக்கையாக மாவட்ட ரீதியாக கரபந்தாட்ட ஒன்றியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன-

இத் தகவலை இலங்கை கரபந்தாட்ட சம்மேளனத் தலைவர் திலக் இதல்கொட தெரிவித்தார்-

இதே சமயம் சர்வதேச கரபந்தாட்ட மத்தியஸ்தர் தேர்வு இங்கு நடத்தப்படவிருக்கிறது சர்வதேச கரபந்தாட்ட சம்மேளனத்தின் ஒப்புதல் கிட்டியதும் கரபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சிக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

இப் பயிற்சி வகுப்பில் தேறும் மத்தியஸ்தர்கள் அடுத்த ஆண்டு இங்கு நடைபெறும் சார்க் நாடுகளுக்கான விளையாட்டுப் போட்டிக்கான கரபந்தாட்டங்களில் கடமையாற்றுவர்-

மேலும் இச் சம்மேளனம் தேசிய மகளிர் கரபந்தாட்ட வீராங்கனைகள் குழுவொன்றையும் நியமிக்கும்

நாடெங்கும் பரவலாக ஆடப்பட்டுவரும் ஆட்டங்களில் ஒன்றான கரபந்தாட்டத்தை தேசிய மட்டத்தில் மேலும் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இச் சம்மேளனம் தெற்காசிய போட்டியையும் கருத்திற் கொண்டு செயல்பட்டு வருகிறது-

ஆனால் போதிய பயிற்சி வசதி இட வசதி பொருளாதார வசதி இல்லாததால் தமது திட்டங்களை திட்டமிட்டவாறு துரிதமாக நடத்தி முடிக்கக் கூடியதாக இல்லை என்று கரபந்தாட்ட சம்மேளனத் தலைவர் கவலை தெரிவித்துள்ளார்-

கரபந்தாட்டம் சர்வதேச தரத்தை எட்ட வேண்டுமானால் அரசாங்கமும் தனியாரும் முன் வந்து உதவ வேண்டும் அப்போதுதான் அபிவிருத்தித் திட்டங்களின் இலக்குகளை எட்டக் கூடியதாக இருக்கும் என்று கூறியுள்ள இவர் நிதியுதவி மகிழ்ச்சியுடன் ஏற்கப்படும் என்று தெரிவித்தார்-

[எ-032]

# நுவரெலியாவில் வலைபந்தாட்டம்

கொழும்பு, ஏப்- 22

எதிர்வரும் 29ஆம் திகதி நுவரெலியாவில் நடத்தப்படவுள்ள வலைபந்தாட்டத்தில் ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசவும் வீராங்கனைகளில் ஒருவராக ஆட்டத்தில் ஈடுபடுவார்

நுவரெலிய உள்ளரங்கு மைதானத்தில் இவ் வலைபந்தாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இம் மாவட்டத்தின் நீர் விநியோகத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் முகமாக நடத்தப்படவிருக்கும் இவ்வாட்டத்தின் மூலம் இரண்டு லட்சம் ரூபா வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது-

இவ்வாட்டத்தைப் பார்ப்பதற்கான கட்டணங்கள் 100 ரூபா 50 ரூபா, 25 ரூபா ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன

[எ-032]

# ஸ்நூக்கர் போட்டிக்கு இலங்கை வீரர் செல்வர்

கொழும்பு, ஏப்- 22

எதிர்வரும் ஜூன் நான்காம் திகதி அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பென் நகரில் ஆரம்பமாகும் உலக இளைஞர் ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப்பில் நான்கு இளம் இலங்கை ஸ்நூக்கர் வீரர்கள் கலந்து கொள்கிறார்கள்-

தேசிய சாம்பியன் இந்திகா தொடங்கொட கனிஷ்ட தேசிய சாம்பியன் சுசந்தா பொத்தேஜு எம் ருக்மால் மதிசமரான ஷியாம் கரீம் ஆகியோரே பிரிஸ்பென் ஆட்டங்களில் ஈடுபடுவதற்கென உத்தியோகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்-

இப் போட்டி ஜூன் நான்காம் திகதி ஆரம்பமாகி 17ஆம் திகதி வரை நடைபெறும்- 36 நாடுகளைச் சேர்ந்த அணிகள் ஆட்டங்களில் கலந்து கொள்கின்றனர்-

இப் போட்டி முடிவடைந்ததும் மெல்பர்ன் நகரில் ஆரம்பமாகவிருக்கும் ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப்பிலும் இலங்கை அணியினர் வசதி கிடைக்கும் பட்சத்தில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது-

பிரிஸ்பென் நகரில் இருந்து மெல்பர்ன் நகர் செல்வதற்கான விமான கட்டணச் செலவை போட்டி ஏற்பாட்டாளர்கள் ஏற்றுக்கொள்ள முன்வருவார்களானால் இலங்கை அணியினர் இச் சாம்பியன்ஷிப்பில் கலந்து கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது

இதேசமயம் எமாவக அசிய ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப் எதிர்வரும் ஜூலை மாதம் ஐகார்த்தா நகரில் நடைபெறவிருக்கிறது- இருபதாம் திகதி ஆரம்பமாகி 31ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இப் போட்டியில் இந்திகா தொடங்கொட மற்றும் எம் எஸ் எம் நௌபர் ஆகியோர் தேசிய மட்டத்தில் முதலிடங்களைச் சுவீகரித்துக் கொண்டவர்கள் என்ற தகுதி அடிப்படையில் ஜகார்த்தா ஆட்டங்களில் பங்குகொள்ளும் வாய்ப்பைப் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது-

[எ-032]

# விளையாட்டு பகுதி

# மேற்கிந்திய அணி இரு போட்டிகளில் வெற்றி

இங்கிலாந்து, ஏப் 22

இங்கிலாந்துக்கும் மேற்கிந்திய தீவுகளுக்கும் இடையே நடந்த டெஸ்ட் போட்டிகளில் 2—1 என்ற ரீதியாக மேற்கிந்திய அணி வெற்றியீட்டியது.

மேற்படி ஐந்து டெஸ்ட் ஆட்ட சுற்றுப் பயணத்தில் இங்கிலாந்து அணி தோல்வியுற்றுள்ள போதிலும் அணியின் காப்டன் கிரஹாம் கூச்சே தொடர்ந்தும் அணிக்கு தலைமை வகிப்பார் என்பது உறுதியாகியிருக்கிறது.

இங்கிலாந்த எதிர்வரும் மாதங்களில் நியூசிலாந்திலும் இந்தியாவிலும் மேற்கொள்ளவிருக்கும் டெஸ்ட் சுற்றுப் பயணங்களுக்கு கூச்சே தொடர்ந்தும் தலைமை தாங்கி நடத்துவார் என்றும், தலைமைத்துவத்தில் மாற்றம் செய்யும் உத்தேசம் இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு இல்லை என்றும் நம்பகமாகத் தெரிகிறது.

கிரஹம் கூச் தலைமையிலான இங்கிலாந்து அணி மைக் கெட்டிங் போன்ற பல புகழ் பெற்ற புள்ளிகள் இன்றி இளம் வீரர்களை உள்ளடக்கிய நிலையில் தமது மேற்கிந்திய சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்டில் இங்கிலாந்து பலம் பொருந்திய மேற்கிந்திய அணியைத் தோற்கடித்தது. இது கடந்த 16 ஆண்டுகளில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இங்கிலாந்து பெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றியாகும்.

மேலும் தான் ஆடியுள்ள 26 டெஸ்டுகளில் இங்கிலாந்து பெற்ற இரண்டாவது வெற்றியும் ஆகும்.

ஆனால் பின்னர் நடைபெற்ற இரு டெஸ்டுகளிலும் மேற்கிந்திய அணியினரே வெற்றி வாகை சூடினர். மிகுதி இரண்டு ஆட்டங்கள் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டன. இரண்டாவதாக கயானாவில் நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெறக் கூடிய சூழ்நிலை நிலவிய போதும் மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டு இங்கிலாந்தின் 2—0 என்ற எதிர்பார்ப்பில் மண் விழுந்தது.

இங்கிலாந்து காப்டன் கூச் முதல் டெஸ்டில் மட்டுமே கலந்து கொள்ள முடிந்தது. கைவிரல் முறிவு காரணமாக மிகுதி இரண்டு டெஸ்டுகளிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. இதே சமயம் அலன் லாம்ப், ரொபின் ஸ்மித், நஸீர் ஹுசெய்ன் ஆகியோரும் கூட எலும்பு முறிவுகளுக்கு உள்ளாயினர்.

அலன் லாம்பின் முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஸ்மித்தின் கைவிரல் எலும்பு முறிவுற்றுள்ள அதே சமயம் நஸீரின் மணிக்கட்டு எலும்பு விரிசல் கண்டது.

ஆனாலும் இவ்வாரம் இங்கிலாந்தில் ஆரம்பமாகும் உள்ளூர் கிரிக்கெட் பருவகால ஆட்டங்களில் தான் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக கிரஹம் கூச் கூறியுள்ளார்.

இதே சமயம் உதவி காப்டனான அலன் லாம்ப் தொடர்ந்தும் அதே பதவியில் இருக்க அனுமதிக்கப்படுவார் என்ற அணியின் நிர்வாகி மிக்கி ஸ்டுவர்ட் நம்பிக்கை தெரிவித்தார்.

சமீப காலத்தில் மேற்கிந்திய அணியினர் எதிர்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுடன் ஒப்பிடும் போது கூச் தலைமையிலான அணியை வித்தியாசமானதாக உணர முடிந்தது என்று மேற்கிந்திய காப்டன் விவியன் ரிச்சர்ட் இங்கிலாந்து அணி பற்றி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய அணியின் துடுப்பாடும் ஆற்றல் போதுமானதாக இருக்கவில்லை என்று அணியின் நிர்வாகி கிளைவ் லொயிட் குறிப்பிட்டுள்ளார்.

(எ-032)

## நிதி சேகரிக்க ஹொக்கி ஆட்டம்

பதுளை ஏப் 21

அண்மையில் துண்குரட்சி ஹொக்கிப் போட்டி ஒன்று பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இப்போட்டியில் மோதிய இலங்கை விமானப்படைக்

# விமான சேவைகள்

ஏப்ரல் 23 (திங்கட்கிழமை)

வந்து சேரும் நேரம்

ஏப்ரல் 24 செவ்வாய்க்கிழமை

வந்து சேரும் நேரம்

# வானொலி

23—4—1990

திங்கட்கிழமை

காலை

11-00 ஒலிபரப்பு முடிவு

10-45 குரல் வுகை

11-00 ஒலிபரப்பு முடிவு

24-4-1990

(செவ்வாய்க்கிழமை)

காலை —

5-00 நாதாஞ்சலி

# டெலிவிஷன்

23—4—1990

## ஏப்ரல் 23 (திங்கட்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | | |
|---|---|---|---|
| 0535 | கராச்சி, பமபாய் | யூ எல் | 182 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் | 504 |
| 0725 | சிப்பல் பாரீஸ், அபுதாபி | யூ எல் | 564 |
| 0805 | பிராஙபோட், சூரிச் டுபாய் | யூ எல் | 548 |
| 0810 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 0825 | குவைத் | யூ எல் | 228 |
| 0935 | பிராஙக்போட் | டி எப் | 3540 |
| 1140 | சென்னை, | ஐ சி | 573 |
| | திருவனந்தபுரம | யூ எல் | 102 |
| 1225 | மாலைதிவு | ஈ கே | 803 |
| 1305 | மாலைதீவு, டுபாய் | எஸ் யூ | 543 |
| 1415 | மாஸ்கோ, கராச்சி, டஸ்கமபேர்க் | ஐ சி | 507 |
| 1500 | திருவனந்தபுரம, திருச்சி | யூ எல் | 162 |
| 1620 | திருவனந்தபுரம | ஐ சி | 574 |
| 1800 | திருச்சி, சென்னை | யூ எல் | 403 |
| 1945 | பாஙகொக் | யூ எல் | 313 |
| 2005 | கோலாலமபூர், | யூ எல் | 457 |
| | சிஙகப்பூர் | யூ எல் | 101 |
| 2115 | நெரிடா, புக்கியோகா | ஈ கே | 802 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0900 | மாலைதீவு | | |
| 0910 | டுபாய், மாலைதீவு | யூ எல் | 312 |
| 0930 | கோலாலமபூர், | யூ எல் | 402 |
| | சிஙகப்பூர் | டி ஏப் | 3540 |
| 1000 | பாஙகொக் | | |
| 1125 | பிராஙக்போர்ட் | ஐ சி | 573 |
| 1235 | சென்னை, | யூ எல் | 161 |
| 1330 | திருவனந்தபுரம | | |
| 1405 | மாலைதீவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1615 | மாஸ்கோ, கராச்சி, டஸ்கமபேர்க் | எஸ் யூ | 543 |
| 1540 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ சி | 507 |
| 1840 | திருச்சி, சென்னை | ஐ சி | 574 |
| 2100 | சென்னை | யூ எல் | 121 |
| 2115 | மஸ்கட் | யூ எல் | 209 |

## ஏப்ரல் 24 செவ்வாய்க்கிழமை

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0030 | சென்னை | யூ எல் | 122 |
| 0640 | மஸ்கட் | யூ எல் | 210 |
| 0700 | அபுதாபி | ஜீ எப் | 4144 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |
| 1020 | திருச்சி | யூ எல் | 132 |
| 1140 | சென்னை, பமபாய் | ஐ சி | 573 |
| 1210 | சோபியா, அபுதாபி, பாஙகொக் | எல்இசட் | 595 |
| 1330 | லண்டன் | இசட் பி | 630 |
| 1405 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1555 | மாலைதீவு | யூ எல் | 162 |
| 1755 | பமபாய், சென்னை | ஐ சி | 586 |
| 2050 | கராச்சி, மாலைதீவு | பி கே | 774 |
| 2230 | சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2230 | பாஙகொக், அபுதாபி, சோபியா | எல்இசட் | 596 |
| 2315 | சென்னை | யூ எல் | 122 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் | 131 |
| 0730 | திருச்சி | ஜீ எப் | 4145 |
| 0815 | அபுதாபி | ஈ கே | 800 |
| 0915 | டுபாய் | யூ எல் | 161 |
| 1115 | திருவனந்தபுரம | யூ எல் | 101 |
| 1200 | மாலைதீவு | ஐ சி | 573 |
| 1235 | சென்னை, பமபாய் | யூ எல் | 503 |
| 1315 | சோபியா, அபுதாபி, பாஙகொக் | எல்இசட் | 595 |
| 1430 | லண்டன் | இசட் பி | 630 |
| 1730 | றியாத் | யூ எல் | 271 |
| 1840 | பமபாய், சென்னை | ஐ சி | 586 |
| 1945 | சென்னை | யூ எல் | 121 |
| 2200 | கராச்சி, மாலைதீவு | பி கே | 774 |
| 2345 | சிஙகப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2330 | பாஙகொக், அபுதாபி, சோபியா | எல்இசட் | 596 |
| | | யூ எல் | 182 |

குறிப்பு- யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூடி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் —பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் — றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றமபற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம) (எ-ர)

பெற்றது.

இப்போட்டியில் மோதிய இலஙகை விமானப்படைக் கோஷ்டி, ஊவா ஹொக்கி கோஷ்டியை 2—0 கோல்களால் தோற்கடித்தது.

பதுளையிலிருந்து இலஙகை பாடசாலை கோஷ்டிக்கு தெரிவு செய்யப்பட்ட ஐ சமீம, சஞ்சீவ ராஜபக்ஸ ஆகியோருக்கு நிதி திரட்டும வகையில் மேற்படி போட்டி ஒழுஙகு செய்யப்பட்டிருந்தது;

ஊவா டி ஐ ஜி திரு டெரி அமரசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

(எ-ரி)

## சிறந்த அணியாக அந்தோனியார்

கண்டி, ஏப்- 22

மத்திய மலை நாட்டில் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரிஅணி கிரிக்கெட் ஆட்டத்தில் பாடசாலை அணிகளுள் சிறந்ததாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் இவ்வாண்டு நடைபெற்ற 16 போட்டிகளில் ஐந்தில் வெற்றியும ஒன்றில் தோல்வியும கண்ட நிலையில் இக்கல்லூரி முன்னணியில் திகழ்கின்றது.

புனித அந்தோனியார் அணியில் விளையாடும நுவன்கல்பகே 1000 ஓட்டஙகளைப் பெற்று சிறந்த துடுப்பாட்டக்காரராகவும, முத்தையா முரளீதரன் இற்றைவரை 110 விக்கட்டுக்களை வீழ்த்தியதன் மூலம சிறந்த பந்து வீச்சாளராகவும திகழ்கின்றனர்,

முத்தையா முரளீதனும பியால் விஜேதுஙகாவும தேசிய விளையாட்டு அணிக்குத் தெரிவாகியிருப்பது தெரிந்ததே.

(எ-ரி)

### 23—4—1990
### திஙகட்கிழமை

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை - கருமாரிஅமமன் சுப்ரபாதம
5-30 பாமாலை - தூர்க்கை அம்மன் பாடல்கள்
5-45 சைவ நற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 பக்திப் பாடல்கள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள்கள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 நாதவினோதம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தக சேவை
10-00 இசையமுதம
10-30 பாட்டு - வர்ணகுலசிஙகம
11-00 வீணைக்கச்சேரி - எஸ் பாலச்சந்தர்
பகல் —
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட நிகழ்ச்சி
6-30 சைவநெறி
6-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி - மலர்வேந்தன்
7-00 முஸ்லிம நிகழ்ச்சி
7-55 உலகச் செய்திகள்
8-00 இளைஞர்மன்றம - நடத்துபவர் த தேவதாஸ்
8-30 பொலீஸாரும நாமும
8-45 மெல்லிசைப் பாடல்கள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலையகத்தில் கலைஞர்
10-00 தாளவாத்தியக் கச்சேரி ப பிரம்மநாயகம
10-30 மெல்லிசைப் பாடல்கள்
10-45 பஜன் - பித்துக்குளி முருகதாஸ்

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை - சிவ புராணம
5-30 பாமாலை - திருவாசகம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள்கள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்தியவிருந்து
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தக சேவை
பகல் —
10-00 இசையமுதம
10-30 வாத்தியம - துரைசுவாமி ஐயஙகார் வீணை
11-00 இசைக்கச்சேரி - ஜி என் பாலசுப்பிரமணியம
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட நிகழ்ச்சி
6-30 பக்திநெறி
6-45 நாட்டுப் பாடல்கள்
7-00 முஸ்லிம நிகழ்ச்சி
7-55 உலகச் செய்திகள்
8-00 விஞ்ஞானதீபம
இரவு —
8-30 "அஙகும இஙகும"- செய்திச்சுருள்
8-50 மெல்லிசைப் பாடல்கள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 பேச்சு - "குறளும சிலமபும" நிகழ்த்துபவர் என் தர்மராஜா
9-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு (மெண்டலின்) ஸ்ரீனிவாசன்



### 23—4—1990
### திஙகட்கிழமை

## ரூபவாஹினி

விடுமுறை ஒளிபரப்பு
9-00 ஹரி புதுமய்
9-15 சாஹித்ய தஹரா
9-40 பிரதீபா
10-05 நிர்வாக நிகழ்ச்சி
10-20 பூமி சாஸ்திரம - (உ - த) தமிழ்
10-45 முத்துஹர பனமுத்து
11-10 நாடகம — சோக் சேர்க்கிள்
11-35 ஒளிபரப்பு முடிவு
4-30 கல்வி நிகழ்ச்சி
5-00 செய்திகள் — சிஙகளம
5-15 காட்டூன் படம
5-30 வண்ணச்சோலை
6-00 மூமமணிகளுக்கு அஞ்சலி
6-19 ரமழான் நோன்பு திறக்க நிகழ்ச்சி
6-30 செய்திகள் — தமிழ்
7-00 தமிழ் நாடகம
7-30 கவி [illegible]
8-00 செய்திகள் — சிஙகளம
8-30 பிரைவட் பெஞ்சமின்
9-00 பாலன் கடதுர ஹா தெசே
9-30 செய்திகள் — ஆஙகிலம
10-00 பீட் பக்
10-15 லைலத்துல் கதிர் — நிகழ்ச்சி
11-15 ஒளிபரப்பு முடிவு

## ஐ. டி. என்.

6-00 மூமமணிகளுக்கு அஞ்சலி
6-15 கொக்ஸிஷெல் பே
6-30 செய்திகள் — சிஙகளம
7-00 சுவசன லொவ
7-30 மதுரசாஙக
8-00 பன் அன்ட் கேமஸ்
8-30 [illegible]
9-00 [illegible]ான்சொயிர்
9-30 [illegible]ங்கு திரைப்படம
10-00 செய்திகள் — ஆஙகிலம
10-26 [illegible]ங்கு திரைப்படத் தொடர்ச்சி
11-15 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

உல்லாச பயணதுறை அபிவிருத்திக்கு

# தொண்டாவின் சிபார்சுகளை அமைச்சரவை ஏற்றது

கொழும்பு, ஏப் 22

உல்லாசப் பயணத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக, அமைச்சர் தொண்டமான் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த சிபார்சுகள் அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

உல்லாசப் பயணத் துறைக்கு தேவையான பயணிகள் வாகனங்களுக்கு சுங்கத் தீர்வை, மொத்த விற்பனை வரி ஆகியன நீக்கப்படும்.

இந்த வாகனங்கள் 30 பேருக்கும் அதிகமானோர் பயணம் செய்வதற்குரியவையாக இருக்க வேண்டும்.

இது ஏற்கனவே தனியார் துறை பஸ் போக்குவரத்துக்கான வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு வழங்கிய சலுகை அடிப்படையிலேயே இருக்கும்.

உல்லாசப் பயணத் துறைக்கு என இறக்குமதி செய்யப்பட்டு 5 வருடங்களுக்கு மேலாக பாவிக்கப்பட்டோ, சேதமடைந்தோ இருக்கும் வாகனங்களுக்குப் பதிலாக இறக்குமதி செய்யும் வாகனங்களுக்கு 50 சத வீத தீர்வை வரிச் சலுகை வழங்கப்படும்.

மேற்கூறிய சலுகைகள் 18–04–1990 இல் இருந்து ஒரு வருட காலத்திற்கே செல்லுபடியாகும்.

உல்லாசப் பயணத்துறை மற்றும் கிராமத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சரின் சிபார்சின் பேரிலேயே வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும். (ந–கு)

சரணடைவு குழு

# சரணடையும் சூழலை உருவாக்க வேண்டும்

## — ஜனாதிபதி

கொழும்பு, ஏப் 22

பயம் இன்றி வந்து சரண் அடைவதற்கு வேண்டிய சூழலை சுதந்திர சரணடைவு குழு உருவாக்க வேண்டும்.

பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றை இதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர சரணடைவு குழு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியை அவரது செயலகத்தில் சந்தித்தது. இந்த வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

பாதுகாப்புப் படைகளின் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருப்பது இந்த சுதந்திர சரணடைவு குழுவிற்கு ஏற்படும் சிரமங்களை குறைப்பதோடு இந்த குழுவின் நடவடிக்கைகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்த உதவுவதுமேயாகும்.

இவ்வேளை எல்லா அரசாங்க அதிபர்களும் சரண் அடைபவர்களை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

அந்தந்த மாவட்ட சரணடைவு குழுக்கள் ஊடாக அரசாங்க அதிபர்கள் இதனை திறம்பட செய்ய முடியும்.

சுதந்திர சரணடைவுக் குழு மாவட்ட சரணடைவுக் குழுவிடம் சரணடைபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுதந்திர சரணடைவு குழு நாடு முழுவதும் உள்ள தடுப்பு முகாம்கள், புனர்வாழ்வு நிலையங்கள் என்பனவற்றிற்கு விஜயம் செய்து, அங்கு இருக்கும் பற்றாக்குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கலாம்.

இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

இந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேலையை திறம்பட செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

சுதந்திர சரணடைவு கமிட்டியில் அங்கம் வகிக்க 10 அரசியல் கட்சிகள் தமது பிரதிநிதிகளாக கீழ்க்கண்டோரை நியமித்துள்ளன.

லிபரல் கட்சி – திரு அசித்தா பெரேரா, ஸ்ரீ ல சு கட்சி – திரு ஜயபத்திரன, அகில இலங்கை முஸ்லிம் லீக் – ஜனாப் ஏ எல் எம் ஹஸீம், இலங்கை முற்போக்கு முன்னணி – திரு சிறிசேன ராஜபக்ஸ, ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி – திரு ரஞ்சித் புஸ்வெல்ல, ஈழவர் ஜனநாயக முன்னணி – திரு எம ராமலிங்கம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் – அல்ஹாஜ் எஸ் எம் சஹாப்தீன், இலங்கை மக்கள் கட்சி – செல்வி ரூபா குமாரணதுங்க, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி – ஜனாப் எம ஐ எம முகைதீன், தமிழீழ விடுதலை அமைப்பு (ரெலோ) – திரு கே சிவாஜிலிங்கம்.

வெளிவிவகார அமைச்சின் சட்ட ஆலோசகர் திரு லால் குருகுலசூரிய, சுதந்திர சரணடைவு குழுவின் செயலாளராக இருப்பார். (ந–கு)

## 80 அகதிகளுக்கு உணவு கிடைக்க ஏற்பாடு

கொழும்பு, ஏப் 22

வீடுகளை இழந்து அகதிகளாகி விட்ட 80 பேருக்கு உணவு கிடைக்க ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த பெருமழையினால் பஞ்சிகாவத்தையில் 12 வீடுகள் சேதமடைந்ததும் அகதிகளான 80 போ பௌத்த ஆலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருப்பதும் தெரிந்ததே.

தமிழக விஜயம் முடிந்து கடந்த வியாழன் நாடு திரும்பிய அமைச்சர் தகவல் அறிந்து அகதிகளை சென்று பார்வையிட்டார். உணவு கிடைக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

அவர்களுக்கு வீடு கிடைக்க அமைச்சர் வீடமைப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவ [illegible]

## ஜனாதிபதிக்கு சமாதான விருது

### இல. இந். கலாசார பேரவை வழங்கும்

### அமைச்சர் செல்லச்சாமி தகவல்

கொழும்பு, ஏப் 22

இலங்கை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவுக்கு அமைதி சமாதானத்திற்கான விருது வழங்கப்படும்.

இந்த விருதை இலங்கை இந்திய கலாசார பேரவை வழங்கும்.

இந்த தகவலை கைத்தொழில் [illegible]

இலங்கை – இந்திய கலாசார பேரவை கோயமபுத்தூரில் சர்வதேச பள்ளி ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறது.

இதில் இலங்கை மாணவர்களை அனுமதிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

இப்படி திரு செல்லச்சாமி கூறினார்.

[illegible]

தனது அமைச்சின் கீழுள்ள

## தொழிற்சாலைகளுக்கு செல்லச்சாமி நேரடி விஜயம்

கொழும்பு, ஏப் 22

கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி தனது அமைச்சின் கீழ்வரும் தொழிற்சாலைகளுக்கு மே மாதம் முதல் வாரத்தில் நேரடி விஜயம் செய்வார்.

தொழிலாளர்களை அவர் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார். வீண் விரயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்.

அமைச்சர் அடுத்த மாதம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பார்.

அடுத்து கலாவ என்ற இடத்திலுள்ள ஒட்டுப்பலகை தொழிற்சாலைக்கும் விஜயம் செய்வார்.

மட்பாண்டக் கூட்டுத்தாபனம், டயர் உற்பத்தித் தொழிற்சாலை, தோல் கூட்டுத்தாபனம், கடதாசித் தொழிற்சாலை ஆகியவற்றிற்கும் அமைச்சர் விஜயம் செய்வார்.

வெளிநாட்டு உதவிகளுடன் புதிய தொழிற்சாலைகள் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வடக்கு கிழக்கு, மலையக பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபட ஊக்குவிக்கும் விதத்தில் பயிற்சித் திட்டங்கள் கொண்டு வரப்படும்.

இவ்வாறு தாம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். [ந–கு]

## இஸ்ரேவல் நலன் காப்பு பிரிவு மூடப்பட்டது

கொழும்பு, ஏப் 22

அமெரிக்க தூதரகத்தில் இயங்கி வந்த இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவு கடந்த 19 ஆம திகதியுடன் மூடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சு கடந்த சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. (ந–கு)

## 'லொட்டோ'

கொழும்பு, ஏப் 22

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இழுக்கப்பட்ட 69 ஆவது லொட்டோ சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு—

வெற்றி பெறும் எண்கள்

**3 10 36 2 4**

**29**

## இலங்கை பிரச்சினைகளை இந்தியா மட்டுமே தடுக்க முடியும்

### —ஜே. ஆர். ஜெயவர்த்தனா

சென்னை, ஏப் 22

இலங்கையில் சில ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் பிரச்சினைகளை இந்தியா மட்டுமே தடுக்க முடியும் [illegible]

தற்காக பெங்களூர் சென்றிருந்தார். பெங்களூரில் இருந்த வண்ணமே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

[illegible]

...இந்தியா: மட் டுமே தடுக்க முடியும.

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனா இவ் வாறு கடந்த வெள்ளிக்கிழமை பெங்களூரில் கூறினார்.

திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா கடந்த வாரம பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவைத் தரிசிப்ப...

கூறினார்.

எந்தவொரு பிரச்சினைக்கும வன்முறை ஒரு தீர்வாக இருக்க முடியாது என்றும அவர் மேலும கூறினார்.

அகில இந்திய வானொலி இச்செய்தியை கடந்த வெள்ளிக் கிழமை மாலை ஒலிபரப்பியது.

(ந-கு)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம 1990 ஏப்ரல் 20 இல்-

| | | | | |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ | 3998-50 | ரூ | 4001-50 |

வர்த்தக வங்கிகள் வழங்கும தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம- 1990 ஏப்ரல் 20 இல்-

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ | 3997-10 | ரூ | 4002-90 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ | 6552-15 | ரூ | 6592-06 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ | 2370-87 | ரூ | 2392-72 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ | 700-80 | ரூ | 715-72 |
| 100 ஜப்பான் யென் | ரூ | 25-2823 | ரூ | 25-5429 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப் பிடிக்கும மத்திய வங்கி வாங்கும விகிதம் ஆகக் குறைந்த வாங்கும விகிதம; ஆகக் கூடிய விற்கும விகிதம;

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ | 117-85 | ரூ | 118-28 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ | 610-60 | ரூ | 613-02 |
| 100 இந்திய ரூபா | ரூ | 230-59 | ரூ | 231-55 |
| 100 ஈரான் ரியால் | ரூ | 56-29 | ரூ | 56-50 |
| 100 நேபாள ரூபா | ரூ | 137-17 | ரூ | 137-74 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ | 182-98 | ரூ | 183-75 |

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12- இலங்கை. தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 23 ஏப்ரல் 1990.

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo — 12
P.O. Box 1613.

...ராஜாங்க அமைச்சரும பேர வையின் காப்பாளருமான திரு எம் எஸ். செல்லச்சாமி கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சில் நடத்திய பத்திரிகை யாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

திருச்சியில் நடந்த கலாசார பேரவையில் வருடாந்த கூட்டத் திலேயே விருது வழங்குவது பற்றி அறிவிக்கப்பட்டது.

இந்த விருது ரஷ்யா ஜனாதிபதி கொர்பச்சேவ், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சர் ஆகியோருக்கும வழங் கப்படும.

விருது வழங்கும வைபவம எதிர்வரும ஜூன் மாதத்தில் 2ஆவது அல்லது 3 ஆவது வாரத் தில் கொழும்பில் நடைபெறும.

இதற்கான ஏற்பாடு களை கவனிக்க பேரவையின் தலைவர் ஆர் ராஜகோபாலன் மே மாதத்தில் கொழும்பு வர விருக்கிறார்.

## ஹிஸ்புல்லா எம். பி. சுகயீனம்

கொழும்பு, ஏப் 22

ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிர ஸின் பிரதி தவிசாளரும் மட் டக்களப்பு மாவட்ட எம பி யுமான ஜனாப் எம எல் ஏ எம ஹிஸ்புல்லாஹ் சுகயீன முற்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இவரின் துரித சுகத்துக்காக மத நிகழ்ச்சிகளை ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ளது.

(ந—007)

...கூறினார்.

இருவார கால விஜயத்தின் போது திருப்பதி, திருச்செந்தூர், சென்னை, திருச்சி ஆகிய இடங் களுக்கு தாம சென்றதாகவும சமயபுரத்தில் தாம தேர் இழுத்த தாகவும அமைச்சர் சொன்னார்.

நாட்டில் அமைதி நிலவ ஜனாதிபதி எடுத்து வரும முயற்சி களை தமிழக மக்கள் பாராட்டு கிறார்கள். இரு நாடுகளுக்கிடை யிலும நெருங்கிய ஒத்துழைப்பு தொடர அவர்கள் விருப்பம கொண்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தை பற்றி தமிழக மக்கள் மிகவும ஆர்வம கொண் டுள்ளார்கள்.

திருச்சியில் நடந்த பேரவை கூட்டத்தில் தற்போதைய நிலை மையை விரிவாக எடுத்துக் கூறிய தாகவும அமைச்சர் தெரிவித் தார்.

(ந-க)

## பொலீஸ் தெரிவு: யாழ். நகரில் பலர் திரண்டனர்

கொழும்பு, ஏப் 22

யாழ் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை பெருந் திரளானோர் பொலீஸ் தெரி வுக்காக திரண்டிருந்தனர்.

இளைஞர்களோடு யுவதி களும பொலீஸ் நியமனத்திற் கென யாழ் பொலீஸ் நிலையத் தில் திரண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

சுமார் 5 ஆயிரம பேர் பொலீஸ் பதவிகளுக்கு விண்ணப் பித்து இருப்பதாக சொல்லப் பட்டது.

நேர்முக பரீட்சை தொடர்ந்த மூன்று நாட்களுக்கு நடை பெறும என எதிர்பார்க்கப்படு கிறது.

(ந-ந)

...உடன் தொடர்பு கொண்டு நடவ டிக்கைகள் எடுத்து வருகிறார்.

[ந-க]

## ஜனாதிபதி அனுதாபம்

சென்னை, ஏப் 22

காலஞ்சென்ற எச் டபிள்யூ ஜெயவர்த்தனாவின் மறை விற்கு ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாச அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில் கூறப்படுவதா வது—

காலஞ்சென்ற எச் டபிள்யூ ஜெயவர்த்தனா இலங்கையின் புகழ்பெற்ற சட்ட வல்லுநர் ஆவார்.

நீதி, சட்டம, அரசியல் துறை களில் சிறந்த விளங்கிய குடும்பத் தில் பிறந்த இவர், இந்த நூற் றாண்டில் இலங்கையின் சிறந்த சட்டவறிஞர்களில் ஒருவராக திகழ்ந்தார்.

அன்னாருக்கு எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(வ-கு)

## தமிழக முதல்வர் அனுதாபம்

சென்னை, ஏப் 22

காலஞ்சென்ற எச் டபிள்யூ ஜெயவர்த்தனாவின் மறை விற்கு தமிழ்நாடு முதலமைச் சர் திரு மு கருணாநிதி அனு தாபம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான இரங்கல் செய்தியை திரு கருணாநிதி, திரு ஜே ஆர் ஜெயவர்த்தனாவிற்கு அனுப்பியுள்ளார்.

(த-கு)

## திணைக்களம்

### எல்லைக் கற்கள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

1990 ம ஆண்டு கற்களாலான, சிமெந்திலான எல்லைக் கற்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள். வழங்குநர்கள் விருமபமிருந்தால் எமது திணைக்களத்துடன் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன— மேற்படி எல்லைக்கற்களின் மாதிரி வடிவமைப்பை எமது பிராந்திய நில அளவைக் காரியாலயங்களிலோ அல்லது எனது அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ள முடியும—

2 எமது திணைக்களத்துடன் ஏற்கனவே பதிவு செய்த வழங்குநர்கள் மீளவும் 1990 ம ஆண்டிற்குப் பதிவைப் புதுப்பிக்க விருமபுமபட்சத்தில் இந்த அறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்க வேண்டும—

3 விண்ணப்பங்களைக் கொண்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "எல்லைக் கற்கள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டு 90-05-15 செவ்வாய்க் கிழமை அன்றோ அதற்கு முன்னதாகவோ தபால் மூலம நில அளவை அதிபதி, சாதனங்களும வழங்கல்களும கிளை, நில அளவைத் திணைக்களம, கிருல வீதி, கொழும்பு -5 என்னும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும- ஒவ்வொரு விண்ணப்பதாரரும எந்த மாவட்டத்திற்கு எல்லைக் கற்களை வழங்க முடியுமென்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும—

4 கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் எமது தாபியாலயத்தில் பதிவு செய்யப்படும எமது திணைக்களப் பிராந்தியக் காரியாலயங்களுக்கு எல்லைக் கற்கள் தேவைப்படுமிடத்து எமமிடம பதிவு செய்யப்பட்டிருக்கும வழங்குநர்களின் பெயர்கள் அவர்களுக்கு அறிவிக்கப்படும- இதனடிப்படையில் பிராந்திய அதிகாரிகள் எல்லைக் கற்களுக்கான கேள்விக் கூறைக் கோருவார்- எமமிடம பதிவு செய்யாதவர்களிடம பிராந்திய அதிகாரிகளினால் கேள்விகள் கோரப்படலோ அல்லது அவர்களின் கேள்விகள் ஏற்கத் தொள்ளப்படவோ மாட்டாது- பிராந்திய அதிகாரிகள் எல்லைக்கற்களின் மாதிரி அளவுகள், தேவையான தொகை, வழங்க வேண்டிய இடம என்பவற்றைத் தவிர கேள்விதாரர் தோறும கடிதத்தில் குறிப்பிடுவார்கள்-

எஸ் டீ ஹெரத்
நில அளவை அதிபதி

நில அளவைத் திணைக்களம.
த பெ இல. 506
கிருல வீதி கொழும்பு-5
1990 – 3.